333

கர ஹூ
சித்திரை மீ

ஸ்ரீ:

ஸம்புடம் 10
ஸஞ்சிகை 4

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தால் மாதந்தோறும்
ப்ரசுரமாகும்

[ஸ்ரீ அஹோபில மடத்துப்பத்ரிகை]

"भक्तस्य दानवशिशोः परिपालनाय
भद्रां नृसिंहकुहना मधिजग्मुषस्ते ।
स्तम्भैकवर्जमधुनाऽपि करीश नूनं
त्रैलोक्यमेतदखिलं नरसिंहगर्भम् ॥"

ப்ரசுரிக்குமிடம்

நெ. 2. ஆதியப்ப முதலி தெரு, புரசைவாக்கம், சென்னை—7.

வர்ஷச் சந்தா
ரூபா 3—0—0

தனிப்பிரதி விலை 0-4-0

APRIL 1951
VOL. 10. NC. 4

விஷய ஸூசிகை

	விஷயம்		பக்கம்
1	மாண்டூக்யோபநிஷத்	...	96
2	ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயம்	...	99
3	திருமாமகளின் பெருமை	...	101
4	ப்ரஹ்லாத சரித்ரம்	...	103
5	ஆஸ்திக்யம்	...	108
6	ஸ்ரீஸ்தவம்	...	113
7	இராமாநுஜாவதாரம்	...	120
8	செய்திகள்	...	122
9	ஸம்பாதகரின் குறிப்புகள்	...	125

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

கர ௵ வைகாசி-௴ - **1951** மே-ஜூன் ௴

(உத்தராயணம்- வஸந்த ருது- வ்ருஷப௴)

15—5—51	1௳	செவ்வாய்க்கிழமை	...	சூன்ய திதி
16—5—51	2௳	புதன்கிழமை	...	சூன்ய திதி
17—5—51	3௳	வியாழக்கிழமை	...	ஸர்வைகாதசி
20—5—51	6௳	ஞாயிற்றுக்கிழமை	...	சதுர்தசி- பௌர்ணமி திதித்வயம்; ஸ்ரீ ந்ருஸிம்ஹஜயந்தி; விசாகம்; நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்
22—5—51	8௳	செவ்வாய்க்கிழமை	...	கேட்டை. ஸ்ரீ அஹோபிலமடம் 35-ம் பட்டம் [களத்தூர்] ஸ்ரீரங்கநாத சடகோபயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்
31—5—51	17௳	வியாழக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி
4—6—51	21௳	திங்கட்கிழமை	...	அமாவாஸ்யை
13—6—51	30௳	புதன்கிழமை	...	வ்ருஷபசுக்ல நவமி திதி
14—6—51	31௳	வியாழக்கிழமை	...	வ்ருஷபசுக்ல தசமி திதி
15—6—51	1௳	மிதுனரவி 2-8 (இன்று ஸங்க்ரமண தர்பணம்)		

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 10 } கர ௵ சித்திரை ௴ { ஸஞ்சிகை 4

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ர தாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹவரவரமுநயே நம:

மாண்டூக்யோபநிஷத்

[ஸ்ரீவைஷ்ணவ தாஸன்]

இந்த உபநிஷத்தில் 4-கண்டங்கள் உள்ளன. அவைகளுக்குள் முதல் கண்டத்தில் பிரிவில்லாத ப்ரணவத்தால் சொல்லப்படுவதாயும் அக்ஷரம் என்ற பெயருள்ளதாயும் ப்ரஹ்மா முதலியோரிடத்தில் நியாமகமாயுமிருக்கிற ஆத்மாவானது நான்கு பாதங்கள் உள்ளதாகச் சொல்லப்பட்டது.

இரண்டாவது கண்டத்தில் ஒன்றாவது, இரண்டாவது, மூன்றாவது பாதங்களுக்கு ஸ்தாநங்கள், வ்யாபாரம், உருவங்கள், அநுபவிக்கத்தகுந்த பொருள், விச்வம், தைஜஸம், ப்ராஜ்ஞம் என்கிற பெயர்கள் இவைகளைச் சொல்லி கீழ்ச்சொன்ன விஷயத்தை ஸ்தாபிப்பதற்காக 'அத்ரைதே ச்லோகா பவந்தி' என்று தொடங்கி ஒன்பது அநுஷ்டுப் ச்லோகங்களும், 4-வது பாதத்தை வ்யாபாரத்துடன் சொல்லி 'அத்ரைதே ச்லோகா பவந்தி' என்று ஆரம்பித்து ஒன்பது அநுஷ்டுப் ச்லோகங்களும் படிக்கப்பட்டன. மூன்றாவது கண்டத்தில் முன்சொல்லப்பட்டவைகளும் ஜாகரிதம், ஸ்வப்நம், ஸுஷுப்தம் என்கிற ஸ்தாநமுள்ளவைகளுமான விச்வம், தைஜஸம், ப்ராஜ்ஞம் இவைகள் ப்ரணவத்தின் முதலாவது இரண்டாவது மூன்றாவது மாத்ரைகளான அகாரம், உகாரம், மகாரம் இவைகளால் சொல்லப்படுவதைச் சொல்லி 'அத்ரைதே ச்லோகா பவந்தி' என்று ஆரம்பித்து ஐந்து அநுஷ்டுப் ச்லோகங்கள் படிக்கப்பட்டன. நான்காவது கண்டத்தில் 4-வது பாதம் ப்ரணவத்தின் அவயவமான நாதத்தால் சொல்லப்படுவதைச்சொல்லி 'அத்ரைதே ச்லோகா பவந்தி' என்றுசொல்லி ஆறு அநுஷ்டுப் ச்லோகங்கள் படிக்கப்பட்டன.

இந்த உபநிஷத்தானது ஸ்ரீசங்கரபாஷ்யம், ஆநந்தகிரிடீகை, ஸ்ரீ ரங்கராமாநுஜமுனி, ஸ்ரீகூர நாராயணமுனி இவர்களால் செய்யப்பட்ட பாஷ்யங்கள் இவைகளுடன் திருப்பதி கோமடம் ஸ்ரீ. உ. ப. ஸ்ரீநிவாஸாசார்யரால் பரிசோதிக்கப்பட்டு 1870-வது வருஷம் ஏப்ரல்மாதத்தில் அச்சிடப்பட்டது. இதன்முடிவில், 'இதில் 'அத்ரைதே ச்லோகா பவந்தி' என்கிற வாக்யங்களிருப்பதால் 'பஹிஷ்ப்ரஜ்ஞோ விபு: விச்வ:' என்பதை முதலாகக்கொண்டதும் 'ஸ ஜ்ஞேயோ நேதரோ ஜந:' என்பதை முடிவாகக்கொண்டதுமான 29ச்லோகங்கள் ஸ்ரீவத்ஸாங்கமிச்ரமுநிகளால் (ஸ்ரீ கூரநாராயண முனிகளால்) மாண்டூக்யோபநிஷத்தாக வ்யாக்யாநம் செய்யப்பட்டன. ரங்கராமாநுஜமுனிகளால் சங்கரபாஷ்யம் முதலிய க்ரந்தங்களை யனுஸரித்து கௌடபாத காரிகைகள் என்று எண்ணி வ்யாக்யாநம் பண்ணப்படவில்லை' என்று அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த வாக்யங்களிலிருந்து 29 ச்லோகங்கள் மாண்டூக்யோபநிஷத்தா? அல்லது கௌடபாத காரிகைகளா? என்கிற ஸந்தேஹம் உண்டாகிறது. 1950ஞ் ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் வெளியான 'ப்ரஹ்மவித்யை' என்னும் ஸஞ்சிகையில் 'மாண்டூக்யகாரிகை' என்கிற தலைப்பின்கீழ் 'கௌடபாதரால் செய்யப்பட்ட மாண்டூக்யகாரிகை என்று பெயர் பூண்ட க்ரந்தம் 4ப்ரகரணங்களாகப் பிரிக்கப்பட்டது. முதல்பாகத்துக்கு ஆகமப்ரகரணம் என்றுபெயர். இதில் விச்வம், தைஜஸம், ப்ராஜ்ஞம், துரீயம் இவைகளின் ஸ்வரூபத்தை நன்கு அறிதல், சேர்த்தும் பிரித்தும் ப்ரணவத்தை உபாஸித்தல் என்கிற உபநிஷத்தில் சொல்லப்பட்டவிஷயம் விரிவாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதில் வேதாந்தத்தின் அர்த்தமே முக்யமாகச் சொல்லப்படுவதால் இது ஆகமப்ரகரணம் என்று சொல்லப்படுகிறது. இது வேதத்திலேயே அடங்கியதென்று மாத்வர்களும் வைஷ்ணவர்களும் நினைக்கிறார்களென்பதை பரிசீலிப்போமேயானால் இதன் உத்கர்ஷத்தை என்னவென்று சொல்லுவோம்'

என்று காணப்படுகிறது. இந்த வாக்யங்களால் 29ச்லோகங்கள் கௌடபாதகாரிகைகளே; மாண்டூக்யோபநிஷத்தல்ல என்று இவைகளை எழுதியவருடைய தீர்மானம் தெளிவாய் ஏற்படுகிறது. இது, இவ்விதம் தீர்மானம் செய்தவரின் மதத்துக்கு ப்ரவர்த்தகரான ஸ்ரீ சங்கராசார்யரால் செய்யப்பட்ட ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமபாஷ்யத்தோடு விரோதிக்கிறது. அந்த பாஷ்யத்தில் 'விச்வம்' என்கிற பதத்தின்வ்யாக்யானத்தில் '[illegible] ||' [illegible]

'[illegible] ||'

[illegible]' என்று வாக்யமிருக்கிறது. இந்த வாக்யத்தால் தைத்தரீயோபநிஷத்தில் '[illegible]' என்று ஆரம்பித்து படிக்கப்பட்ட வாக்யங்களுக்குப்போல் '[illegible]' என்று ஆரம்பித்து உதாஹரிக்கப்பட்ட 29 ச்லோகங்களுக்கு மந்த்ரத்வத்தை நிர்ணயம் செய்து ஓம் என்பதை முதலாகக்கொண்ட 12 வாக்யங்களைப்போல் அந்த ச்லோகங்களை மாண்டூக்யோபநிஷத்தாக ஒப்புக்கொண்டு செய்த ஸ்ரீ கூர நாராயணமுநிகளின் வ்யாக்யானம் கைலாகு கொடுக்கப்பட்டதாகிறது. '[illegible]' என்ற ஆரம்பமுள்ள 4-வது கண்டத்தின் வாக்யத்தின் முடிவான '[illegible]' என்பதை இரண்டுதரம் சொன்னது கீழ்ச்சொல்லப்பட்ட உபாஸனத்தின் உபதேசத்தை தீர்மானிப்பதற்காக என்றும் '[illegible]'என்று ஆரம்பமுள்ள கடைசி ச்லோகத்தின் முடிவான '[illegible]' என்பதை இரண்டுதரம் சொன்னது கீழ்ச்சொல்லப்பட்ட எல்லா விஷயங்களையும் தீர்மானிப்பதற்காகவும் உபநிஷத்தின் முடிவுக்காகவும் என்றும் இவர்களின் அபிப்ராயம். 3-வது கண்டத்திலிருக்கிற '[illegible]' என்பதற்கு மாண்டூக்யோபநிஷத்தின் சங்கர பாஷ்யத்தில் '[illegible]' என்று ச்லோகபதம் மந்த்ரபரமாக விவரணம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் மாண்டூக்யோபநிஷத்தின் பாஷ்யத்துக்கும் ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாமபாஷ்யத்துக்கும் ஒன்றுக்கொன்று விரோதமில்லை. மாண்டூக்யோபநிஷத்தின் சங்கரபாஷ்யத்துக்கு வ்யாக்யானம் செய்த ஆநந்தகிரியால் முதலாவதும் நாலாவதுமான '[illegible]' என்பதின் பாஷ்யத்தை எடுத்துக்கொண்டு '[illegible]' என்றும் '[illegible]' என்றும் சொல்லப்பட்டிருப்பதால் பிற்பட்டவர்கள் 29 ச்லோகங்களை கௌடபாதகாரிகைகள் என்று நினைக்க இடம் ஏற்பட்டதாக சில வித்வான்கள் அபிப்ராயப்படுகிறார்கள். ப்ராஹ்மஸூத்ரசாங்கரபாஷ்யம் 2-வது அத்யாயம் முதல்பாதத்திலிருக்கிற '[illegible]' என்கிற ஸூத்ரத்தின் வ்யாக்யானத்தில் '[illegible]

ஞ்ருதெ தஹா ।ʼ ஊதி’’ என்றும் அதன் வ்யாக்யாநங்களில் ‘ வ்ரஜஸ்ஸூதிரோஹ ஊதெருதி’ என்றும் இருப்பதால் ஸ்ரீ சங்கராசார்யர் 29 ச்லோகங்களை கௌடபாதகாரிகைகள் என்று சொல்லியிருப்பதாகச் சொல்ல இடமுண்டாகிறது. இப்படிச்சொன்னால் முன்கூறிய அவருடைய பாஷ்யங்களோடு ஸூத்ர பாஷ்யத்திற்கு விரோதம் வரும். ஆதலால் ‘‘ கௌடபாதாசார்யரால் இவ்விஷயத்தில் ‘ ஊநாஹிரோயயா’ என்பது ப்ரமாணமாகச் சொல்லப்பட்டது’’ என்று இந்த பாஷ்யத்திற்குத் தாத்பர்ய வர்ணநம் செய்தே சங்கர பாஷ்யங்களின் விரோதத்தைப் பரிஹரிக்க வேணும். சங்கரபாஷ்யங்களின் சில வ்யாக்யாநங்களிலிருந்து 29ச்லோகங்கள் கௌடபாத காரிகைகளென்றே ஏற்படுவதால் அந்த பாஷ்யங்களுடன் அதன் வ்யாக்யாநங்களுக்கு விரோதம் பரிஹரிக்க முடியாததே.

இப்படித் தன் மத க்ரந்தங்களின் நிலையிருக்க இதையறியாமல் ஒவ்வொரு ப்ரஹ்ம வித்யா ஸஞ்சிகையிலும் தமிழிலும் இங்கிலீஷிலும் மாத்வ வைஷ்ணவ மதங்களைக் கீழ்ச் சொன்னபடி தூஷிப்பது அர்த்தமில்லாததே. சங்கரபாஷ்யம் முதலிய எல்லா மதாந்தரக்ரந்தங்களையு மறிந்தவரான ஸ்ரீ ரங்கராமாநுஜ முநிகள் 29 ச்லோகங்கள் மாண்டூக்யோபநிஷத்தில் அடங்கினதாக அறிந்திருந்தாலும் தன்னுடையதான மாண்டூக்யோபநிஷத்தின் 12 வாக்யங்களின் பாஷ்யத்தால் அந்த ச்லோகங்களின் அர்த்தம் அறியப்படலாம் என்று எண்ணத்தாலோ, அல்லது படித்தமாத்ரத்தால் அவைகளின் அர்த்தம் அறியப்படுவதால் பாஷ்யம் வேண்டியதில்லை என்கிற எண்ணத்தாலோ அவைகளுக்கு பாஷ்யம் செய்யவில்லை என்று சொல்லமுடியும்.

இவ்விஷயத்தில் உண்மை பின்வருமாறு:— முதலாவதான ஆகமப்ரகரணம் பூராவும் மாண்டூக்யோபநிஷத்தே. அதில் கௌடபாதாசார்யருடைய பதம் ஒன்றுகூட இல்லை. வைதத்யம், அத்வைதம், அலாதசாந்தி என்கிற மூன்று ப்ரகரணங்கள் கௌடபாதாசார்யருடையதாக இருக்கலாம். ஆகமப்ரகரணம் வேதத்திலேயே அடங்கியதென்று மாத்வர்களும் வைஷ்ணவர்களும் நினைக்கிறார்கள் என்று சிலர் எழுதுவது தன் மதத்துக்கு ப்ரவர்த்தகரான ஆசிரியரின் பாஷ்யங்களுக்குப் பொருந்தாததே. இவ்விஷயத்தைப்பற்றி விரிவாகப் பிறகு எழுதுவோம்.

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

முன் வருஷங்களின் ஸஞ்சிகைகள்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் சென்ற ஸம்புடங்களின் ஸஞ்சிகைகளில் கீழ் குறிக்கப்பட்ட ஸஞ்சிகைகள் செலவாகிவிட்டதால் அவைகள் தவிர மற்ற ஸஞ்சிகைகள் **ஸ்வல்ப ப்ரதிகளே** கைவசமிருக்கின்றன. அபேக்ஷையுள்ளவர்கள் உடனேயே எழுதித் தருவித்துக்கொள்ளவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம். ஒரு ஸஞ்சிகையின் விலை அணா **4.**

கைவசமில்லாத ஸஞ்சிகைகளின் விவரம்

ஸம்புடம்			ஸஞ்சிகை நெ.
1	...	...	*3.*
4	...	...	*5, 6, 7.*
7	...	...	*11, 12.*
8	...	...	*1.*
9	...	...	*2*

(மற்ற ஸஞ்சிகைகள் கிடைக்கும்.)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹவரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

(ஸ்ரீ. உப: A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A, B.L., அட்வோகேட், திருச்சி.)

பரபக்தியெனும் முக்திஸாதநத்தையும், அந்த ஸாதநத்தால் ஸாத்யமான மோக்ஷத்தையும் எடுத்துக்கொண்டு அவ்விரண்டையும் சீர்தூக்கிப்பார்க்கும்விஷயத்தில் இப்படியே மூன்றுகோடிகளும் ஊசலாடிக்கொண்டேயிருக்குமென்றும் பொருள் கொள்ளலாம். 'அநிமித்தா பவதி பக்தி: ஸித்தேர்கரீயஸீ' என்று ஸ்ரீ பாகவதம் மோக்ஷஸித்தியைக் காட்டிலும் ஸ்வயம் ப்ரயோஜநமான ஸஹஜமான பக்தி சிறந்ததென்று கூறிற்று. விஷ்ணு பக்தி ஓர் பூர்ண வடிவத்தோடு அடுத்த அங்கம் முதலில் ப்ரவேசிக்கிறாள். இந்த அங்கத்தின் முடிவில், அதாவது ஒரு ச்லோகத்திற்குப் பிறகு, 'விசதி ஸாம்ப்ரதிஸமயம் விஷ்ணுபக்திர்விசாலா' என்று பாடப்போகிறார். அடுத்த அங்கம் 4-வது ச்லோகத்தில் 'விஷ்ணு பக்தி ஸமாதி ஸ்வயம் தானே ப்ராப்யபலமா? அல்லது அது ஒரு ஸாதநம் மட்டுமேயா? என்று தர்க்கவிமர்சம் செய்வது வீண் ச்ரமத்தைத் தருமேயொழிய நிர்ணயம் என்னும் பலத்தைத்தராது' என்று கூறப்போகிறார். அங்கே மோக்ஷஸாதநமான பக்தி ப்ரபத்தியையும், அதன் ஸாத்யமான மோக்ஷத்தையும் நிறுத்துப்பார்க்கிறதாகச் சொல்லவேண்டியதே. இங்கு முன்கூறிய இருவழியிலும் கொள்ளலாம். கர்மயோகம் தானே ஜ்ஞாநயோகத்வாரமில்லாமல ஸ்வஸ்வரூபத்யாந ஸமாதிபலமான ஸாக்ஷாத்காரத்தை விளைவிக்கும். அதை ஸாதிக்கும் கர்மயோகமும் முமுக்ஷுக்களுக்கு இன்பமயமே. இன்பகானங்களால் பரனிடம் லயம் வரலாம். லயஸாதநமான இன்பகானமும் இன்பமே, லயமும் இன்பமே.

ராஜா— ஸேநாபதியே! மோக்ஷவாசற்கதவு பாதி திறந்திருக்கிறதென்று நினைக்கிறேன். நம் மநோரதம் மிகவும் கிட்டிக்கொண்டிருக்கும் இந்த ஸமயத்தில் நாம் மிகவும் கவனமாய் இருக்கவேணும்.

அவிக்ஷேபம் ஸம்ருத்த்யா ஸேவிதோऽஹம்

ஸம்ருத்த்யா

நியதிமதிவ்ருத்தாம் நித்யமாஸாதயாமி |

த்வரயித ஸம்விதேஷீம் த்வந்தே விஷ்ணுபக்திம்

கமயித ஸம்ருத்தே ஸித்திம் ஸ்வ ஸேநாபதே

த்வம் ||

ஸுமதிதேவி பூர்ணமான பஹுமானத்துடன் என்னோடு இப்பணியில் ஸஹகரித்து, நான் மமதையே அடியோடு விட்டு கேவலம் ஸர்வாந்தர்யாமிக்குப் பரதந்த்ரனாய் 'வாஸுதேவனே எல்லா'மென்றுஅவனையே கதியாகப் புகுந்து 'மம மாயா துரத்யயா' என்று வர்ணித்த மாயை என்னும் தாண்டக்கூடாத விதியை விரோதமில்லாமல் அநுகூலப்படுத்திவிடுகிறேன். உம்முடைய ஜீவமோக்ஷண வ்யவஸாயத்தில் விஷ்ணுபக்தி தேவியை த்வரைப்படுத்தி இந்த கார்யத்தின் ஸித்தியைக் கணக்கில்சேரும்படி செய்யவும். நீ போய் ஸம்விதாநம் செய்யவேணும்.

ஸேநாபதி— கட்டளைப்படிக்கே ஸ்வாமி!

[போகிறார்]

ராஜா— [எதிரேநோக்கி] ஸுமதியின் அந்தப்புரம் ஸ்வயமாக ஜ்வலித்துக்கொண்டிருக்கிறது; அதினுள் செல்லுகிறேன்.

பவ்யசாந்திநீம் ஸ்ரீமதீநாம்

பஹுவிஹாரவிததிவைபவம் ப்ராஸாதேந: |

ஸ்வயம் ... ஸித்தஸக்ஷ்யம்

ஸுமதே தவ ஸக்ஷ்யம் விஹாதி ஸௌதம் ||

'ப்ரஜ்ஞாப்ராஸாதமாருஹ்ய' 'ப்ரஜ்ஞையாகிய உப்பரிகையிலேறி, ப்ரஜ்ஞையின் உந்நத உப்பரிகையிலேறி' என்பர். ஸுமதி என்பது ப்ரஜ்ஞை. ஸுமதி மாளி

கையின் கோபுரமண்டபம். இது ஜடமான ப்ராக்ருதமண்டபமல்ல, ஸ்வயம்ப்ரகாசமான ஜ்ஞாநமண்டபம். 'ஸத்வமயம் ஸ்வயம்' என்பது 'சுண்ணாம்பு வெண்மையாலமைந்தது' என்பதையும், 'அம்ருதமயம்' என்பதையும் சொல்லும். வெண்மை ஸத்வவர்ணமென்பர். வெண்மையால்மட்டும் சுண்ணாம்பு வெண்மையை நினைப்பது, ஜடச்சுண்ணாம்பு வெண்மையல்ல. சுத்த ஸத்வாத்மகமான ஸத்வம் வெள்ளையடித்தால் தூளி புழுதி கருப்புகளெல்லாம் மறைந்துபோம். ரஜஸ், தமஸ் என்ற இரண்டையும் ஸத்வம் தலையெடுத்து அடக்கி ஒழித்துவிட்டது. இந்த ஸுமதிமண்டபத்தில் என்ன காட்சிகளுண்டு? ஸம்சயங்கள் நீங்கி என்ன நிர்ணயங்கள் ப்ரகாசிக்கின்றன? ச்ருதிகளுடைய பலாபலத்தைத் தெளிவாகக் காட்சி காணும் மண்டபம். ச்ருதிகள் இங்கே உள்ளபடி தம்தம் பலத்தோடு காணப்படும் மண்டபம். ச்ருதிபலாபலங்கள் வெளிச்சமாய்க் காணும் மண்டபம். ப்ரமாணஸூத்ரங்களால் இந்த புத்தி மண்டபம் அளந்து அமைக்கப்பட்டது. ஸூத்ரங்கள் இந்த ச்ருதிபலாபல நிர்ணயத்தில் அளவெடுக்கும் ப்ரமாணம். ஸூத்ரங்களால் அளவுகள் செய்து 'ப்ளான்' போட்டு மண்டபம் முதலியது கட்டப்படும். மற்ற ப்ரமாணங்களைக்கொண்டு ச்ருதி விஷய நிர்ணயங்களை மநநம்செய்து 'இது யுக்தம்தான்' என்று த்ருடமாக்கப்பட்டது,

(உற்றுப்பார்த்து) இங்கே விசுத்தமான அமுதவெள்ளம்போல சாந்தி மதுரமாய் சுண்ணாம்பும் வெள்ளைநீர்போல சுத்தவெண்மை நிறத்துடன் பார்க்க இனிப்பாயும் ச்வேதத்வீபத்தின் தேவதைபோல இங்கே காணப்படுகிறாளே இவள் யாரோ? (கொஞ்சம் ஸமீபத்தில் நெருங்கி) இவளை முன்பு பார்த்திருப்பது நினைவுக்கு வருகிறது. இப்போது அதிக மாறுதல்களால் வேறுபோல் காண்கிறாள். (ச்வேதத்வீபத்தில் வஸிப்பவர் முக்தர்போன்றவர்கள். எப்பொழுதும் கைகூப்பியவண்ணம் ஹ்ருஷ்டராய் 'நம:' 'நம:' என்றுமட்டுமே உச்சரித்துக் கொண்டிருப்பவர்)

ஜயதிவிஸ்வசர்வத்ராயுத்நாகூர வஸ்ஸித
ததிஸிராநநேத்ரஸேவிதாஸிஸ்வர்நேது: |

த்யாதிஸிரவிரஜாஹஸிதேத்ருதாயஸ்ரீ
ஶிரஶதாநு
விஶதிஸூரதிஸாயம் விஷ்ணுபக்திவிஶ்ருஶ்ரு
ஜயதி ||

விஷ்ணுபக்தி என்னுமிவள் தர்மார்த்தகாமமோக்ஷங்களென்னும் எல்லாப் புருஷார்த்தங்களையும் தரும் கற்பகக்கொடி. ('ஆர்த்தன், ஜிஜ்ஞாஸு, அர்த்தார்த்தீ, ஜ்ஞாநீ ஆகிய நான்குவித அதிகாரிகளும் என்னை பஜநம் செய்து பலனடைகிறார்கள்' என்று கீதை) சுபமான மதியையுடைய அநந்யரான ஸித்தக் கூட்டங்களால் ஸேவிக்கப்படுகிறவன். 'ஆத்மாராமாஹி முநயோ நிர்க்ரந்தா அப்யுருக்ரமே | குர்வந்த்யஹைதுகீம் பக்திம் இத்தம்பூதகுணோ ஹரி:' ஸித்தரான ஜ்ஞாநிகளும் பகவானை ஸ்வயம் ப்ரயோஜநமாக பஜிப்பதே பேரின்பமென்று ரஸித்து பக்தி செய்கிறார்கள். ஹரியின் குணம் இப்படி பற்றிலரான ஸித்தரையும் இழுக்கிறது. இவனுடைய வெண்ப்ரகாசங்கள் திகந்தங்களிலும் ஜ்வலிக்கின்றன. இப்படி மஹாமஹிமையுள்ளவளாய் அத்யந்த சுத்தமான ஸுமதியின் உப்பரிகையில் விஷ்ணுபக்தி நுழைகிறாள்.

நானும் உள்ளே சென்று ஜீவன் க்ருதக்ருத்யனும் க்ருதார்த்தனுமானது திண்ணமாகத் தெரியும் வரையில் ஸஹதர்மசாரிணியான ஸுமதிதேவியோடு மோக்ஷமென்னும் பரமோத்தம ச்ரேயஸ்ஸுக்குத் தக்கபடி இருந்து வருகிறேன். (என்று விமர்சத்தோடே உள்ளே செல்கிறார்.) இங்கே விமர்சஸந்தி முடிவுபெறுகிறதை 'அவிமர்சம்' என்று அங்கமுடிவில் படிக்கிறார். 'ஸாவமர்சே ப்ரகாசா நிவ்ருத்தி:' என்று ஸந்தி ச்லோகத்திலுள்ளபடியே 'ஸவிமர்சம்' என்று படநம். லக்ஷணச்லோகத்திலும் 'நிர்வ்ருதி' யென்னும் ப்ரயோஜந ஸித்தியைக் கூறுவதற்குமுன் 'அத' என்னும் மங்களத்வநியை வைத்துள்ள ரஸம் ரஸிக்கத்தக்கது. இந்த மோக்ஷஸித்தியென்னும் பலத்திற்கு அந்த பதத்தின் நிவேசநம் மிகவழகு. ஸூத்ரகாரரும் தம் ப்ரஹ்மஸாநுபவ சாஸ்த்ரத்தொடக்கத்திலேயே இந்த மோக்ஷமாகிய பலத்தை நினைத்தே 'அத' என்று தொடங்கினர். 'அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா

ஹவதி' என்று ப்ரஹ்மஜ்ஞாநாநுபவங்களில் ஆசையென்னும் பேரின்ப ஆசையின் உதயம் பரம மங்களமென்றும் அது பரம மங்களமாக நிர்விக்நமாக அநாவ்ருத்தமான ப்ரஹ்மாநந்த போகஸாம்ராஜ்யத்தோடு முடிவுபெறவேணுமென்றும் மங்களத்வநியால் ஸூசித்தார். பரமஹம்ஸருடைய பரம மங்களஹம்ஸத்வநியோடு தொடக்கம். விக்நேசருடைய 'வாதாபி கணபதிம்' முதலிய கீர்த்தனைகள் ஹம்ஸ்த்வநியில் பாடப்படும். ப்ரபோதசந்த்ரோதயத்தில் 2-வது அங்கத்தில், சார்வாகன் 'விஷ்ணுபக்தியென்னும் மஹாப்ரபாவசாலியான யோகிநீ ஒருத்தி இருக்கிறாள். இக்கலியில் அவள் ப்ரசாரம் மட்டாயிருந்தாலும் அவள் கடாக்ஷம் பெற்ற குலங்களை நாம் நம் கண்ணால்கூடப் பார்க்கமுடியாது, அணுகமுடியாது. ஆகையால் மஹாமோஹராஜரே! நீர் இதுவிஷயத்தில் கவனமாகயிருக்கவேணுமென்று மஹாமோஹனிடம் எச்சரித்தான். மஹாமோஹனும் 'அவள் ப்ரஸித்தமஹாப்ரபாவை' என்று கூறினான். 3ம் அங்கத்தில் க்ஷபணகன் ஜ்யோதிஷகணநம் செய்து 'ச்ரத்தை என்பவள் விஷ்ணுபக்தி தேவியோடுமஹாத்மாக்கள் ஹ்ருதயத்தில் வஸிக்கிறாள்' என்று ஜ்யோதிஷமுரைக்கிறான். 'கணநம்செய்துகூறுகிறான்' என்பது இருதரம் படித்துள்ளது. 'க்ஷந்தே விஷ்ணுபக்திம் ப்ரணயிதம் ... ஸித்திம்' என்பதால் ப்ரபோதசந்த்ரோதயத்தில் சார்வாக க்ஷபணக காபாலாதிகள் விஷ்ணுபக்தியின் ப்ரபாவத்தை நடுங்கிப் புகழ்ந்ததை ஸ்வாமி ஸூசிக்கிறார். 'உத்யம் தேவீ ஸிஷேவே விஷ்ணுபக்தி:' என்று காபாலிகனங்கே ஸித்திக்கு விஷ்ணுபக்தியென்னும் தேவிதான் மூலம் என்றும் கூறியதும் இங்கே கடைசி ச்லோகமிரண்டிலும் ஸ்வாமி நினைவிலுள்ளது. 'ஸித்தம் ஸமேத்ய ... க்ருதக்ருத்யம்' என்றும் அங்கே விவேகர் இவளால் மநோரதஸித்திபெற்று க்ருதக்ருத்யராவது திண்ணமென்பதையும் காபாலிகனுரைத்தான். இப்படி புறச்சமயத்தாரும் புகழ்வதை அத்வைதவேதாந்த நாடகம் விளக்கிற்றென்பதை ஸூசிக்கிறார். 4-வது அங்கத்தில் மாலதீமாதவீய நாடகத்தில் மாலதியை அகோரகண்டை அபஹரித்துத் தூக்கிச் சென்றதுபோல, மஹாபைரவி ச்ரத்தையைப்பிடித்திழுத்துப்போகையில் விஷ்ணுபக்தி வந்து காப்பாற்றினாளென்றும் ப்ரபோதசந்த்ரோதயத்தில் வர்ணிக்கப்படுகிறது. அங்கே 5.6 அங்கங்களில் விஷ்ணுபக்தியே பாத்ரமாக வந்து கடைசிவரையில் மோக்ஷஸித்தியைச் செய்விக்கிறாள். இங்கே 9-வது அங்கத்தின் முடிவில் விஷ்ணுபக்தி ப்ரவேசிப்பதையும் பேசி பிறகு அடுத்த அங்காரம்பத்திலேயே அவள் ப்ரவேசித்து கடைசிவரையில் ஜீவமோக்ஷஸித்தியை நிறைவேற்றிவைக்கிறாள்.

9ம். அங்கம் முற்றுப்பெற்றது.

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ||

திருமாமகளின் பெருமை

[ஸ்ரீ. உப. வித்வான், முடும்பை, சக்ரவர்த்தி, வேங்கடாசார்ய ஸ்வாமி, தில்லையம்பூர்.]

199522

பெரிய பிராட்டியின் ஸ்வரூப ஸ்வபாவங்களின் உண்மையை ச்ருதி, பாஞ்சராத்ரம் ஸ்ம்ருதி, இதிஹாஸம், பூர்வாசார்யர்களுடைய வாக்யங்கள் முதலியவைகளைக்கொண்டு நிர்ணயம் செய்து சுருக்கமாக எழுதுகிறோம்.

'அஸ்யேஶாநா ஜகதோ விஷ்ணுபத்நீ' என்ற ச்ருதியில் அஸ்ய ஜகத: விஷ்ணுபத்நீ ஈசாநா என்பதால் பெரிய பிராட்டி ஈச்வரனுடைய பத்நீ என்பதும், தானே ஈசநம் பண்ணுகிறவள் என்பதும் சொல்லப்பட்டதாகிறது. 'ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ' என்கிற ச்ருதியில் ஹ்ரீம்ஶ்ரீம் என்ற பதத்திற்கு மூன்றுவிதமாக அர்த்தம் சொல்லலாம் 'ஶ்ரேயஸாம் ஹ்ருதயம் ஸம்யக் ...' என்கிற வ்யா

கரண ஸூத்ரப்படி ‘ஶ்ரஞ்ஸேவாயாம்’ என்கிற விக்ரஹத்தில் ‘க்விப்’ என்கிற ப்ரத்யயம் வந்து ஶ்ராதீநாஞ்ச தீர்க்க: ப்ரத்யயம் வந்து ஶ்ரீ என்ற சொல் ஏற்படுறது. ‘க்விப்வசிப்ரச்சி ஆயதஸ்துகடப்ருஜுஶ்ரீணாம் தீர்க்கோஸம்ப்ரஸாரணஞ்ச’ என்கிற உணாதி ஸூத்ரத்தினல் ‘ஶ்ரிஞ்’ தாதுவின் மேல் ‘க்விப்’ என்ற ப்ரத்யயம் வந்து தீர்க்க ப்ரத்யயம் வந்தும் ஶ்ரீ என்ற சொல் ஏற்படுகிறது. ‘ஶ்ரயந்தீம் ஶ்ரியம்’ ‘ஸர்வலக்ஷணே’ என்றிருப்பதால் எங்கும் வ்யாபித்தவள், விழுங்குபவள் அதாவது ப்ரளயம் செய்பவள் என்று பொருள். ப்ரளயம் ஸ்ருஷ்டி ஸ்திதிகளுக்கும் உபலக்ஷணம். ‘ஸர்வபூதாநாம் ஈஶ்வரீம்’ என்பதற்கு ‘ஸர்வபூதங்களுக்கும் ஈச்வரனாயிருப்பவனுடைய பத்நீ’ என்று அர்த்தம் சொன்னால் ஸர்வபூதாநாம் என்று தனித்திருப்பதை ஈஶ்வரீம் என்பதன் ஏகதேசமான ஈஶ்வர என்பதுடன் அந்வயிக்கவேண்டிவருமாதலால் வ்ருத்தி(வ்ருத்தி)க்குண்டான அஸாமர்த்யம் என்ற தோஷமேற்படும். ஆக மேற்கூறிய ச்ருதிகள் பிராட்டி ஈசநம் பண்ணுபவள் என்றும் அவள் ஸர்வவ்யாபி என்றும் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்பவள் என்றும் சொல்லுகின்றனவென்று கொள்ளவேண்டும்.

பாஞ்சராத்ரத்தில் ‘ஈஶாநா தேவ தேவஸ்ய ஹரி விபூதி ரூபாதிகா’ [லீலாவிபூதி நித்யவிபூதி என்ற உபயவிபூதிகளும் இந்த லக்ஷ்மிக்கும் எனக்கும் சேஷபூதங்கள்] என்று பகவான் சொல்லுவதால் பிராட்டியும் ஈச்வர தத்வமெனச் சொல்லப்பட்டதாகிறது.

ஆழ்வார்கள் ஸ்ரீஸூக்திகளிலும் ‘கோலத் திருமாமகளோடுன்னை’ ‘நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும்’ என்றிவ்வாறாகப் பலவிடங்களில் பிராட்டியின் பெருமை பேசப்பட்டிருக்கிறது. ஸ்ரீ ஆளவந்தாரும் ‘தவ ஶ்ரீ ஶ்ரீ: ஶ்ரீபதிர்ந தாவக மஹிம்நோ ஸ்வயம் ஶம்புஸ்ஸதா ப்ருஹஸ்: நாஹம் ஶதக்ருத்வோஷிதா நிரவயிம் நிஶ்ஸாதிஶயம் ஸ்தவ:’ என்று எம்பெருமானுக்கும் அறியநிலமல்லாததுன்பெருமை என்று அருளிச்செய்திருக்கிறார். பிராட்டிக்கு புருஷகாரத்வம்; உபாயத்வம், உபேயத்வம் என்ற மூன்று ஆகாரங்கள்; எம்பெருமானுக்கு உபாயத்வம் உபேயத்வம் என்று இரண்டு ஆகாரங்கள்தான். ஆசார்யனுக்குப் புருஷகாரத்வம் ஒன்றுதான். இதைத் திருவுள்ளத்தில் கொண்டுதான் ஸ்ரீ ஆளவந்தார் ‘அகாரத்ரய ஸம்பந்நாம்’ என்று பிராட்டியின் சிறப்பைப் பற்றிப் பேசினர். ஸ்ரீபாஷ்யகாரர் கத்யத்தில் முதலில் ஸ்ரீப்ரபத்தியைச் சொல்லி உபாய காலத்திலும் ‘ஸ்ரீமந்’ என்று பிராட்டியுடன் கூடிய எம்பெருமானையே உபாயமாகப்பற்றுகிறார். ‘உபாயோபேயத்வே ததிஹ தவ தத்வம்’ (எம்பெருமான் பிராட்டி இருவரிடமும் சேர்ந்து ஒரே சேஷித்வமிருக்கிறது) என்று சோமாசியாண்டான் என்ற ஸ்ரீராமமிச்ரர் அருளிச்செய்தார். பட்டரும் ‘ஶ்ரியம் ஶ்ரீதேவீம் இஹ ப்ரணீத:’ (ப்ரமாணம் தவறுமல் பேசுகின்ற நாங்கள் ப்ரமாண ஆராய்ச்சியில் பெரியபிராட்டியை எம்பெருமானுக்கும் ஒருபடி உயர்ந்தவளென்றே சொல்லுவோம்) என்றார். ‘ஶ்ரியம் லோகே தேவஜுஷ்டாமுதாராம்’ என்ற ச்ருதியிலுள்ள ‘உதாரா’ சப்தத்தின் வ்யாக்யானமான ச்லோகத்தில் ‘போகம் மோக்ஷம் வா ஸுமஹதிதி ஸ்வேஹாம் வரதே விதீர்ய’ என்று பிராட்டிக்கு ஸாக்ஷாந் மோக்ஷப்ரதத்வத்தை அருளிச்செய்தார்.

மேலும் *ஈட்டில் முதல் ஸ்ரிய:பதியில் ‘ஆழ்வார்கள் மந்த்ரத்தில் பூர்வோத்தர கண்டத்தில் அருளிச்செய்யுமதான உபாய தசையிலும் ப்ராப்யதசையிலும் வாசியற ஒரு மிதுன உத்தேச்யம் (90)*‘ஸ்ரீமானை நாராயணனே பரதத்வம்’ (60). ‘ஒண்டொடியாள் திருமகள் கேள்வன் ஒருவனையே நோக்குமுணர்வு’ என்கிற படியே ஸர்வேச்வரன் ஸ்ரிய:பதியென்றே சொல்லிற்று’(5?)-ஜ்ஞாநமாகில் ஸ்ரிய:பதியைப் பற்றியல்லது நில்லாது (58)— ‘பிராட்டியருகேயிருந்து போக்குவிக்கப்போக்குவது. ஆசார்யனுக்கும் புருஷகாரத்வம் ஸமமாயிருக்க இது தான் ஏற்றம்’ (432)— ‘திருவின் மணாளன்— இவருடைய வமிருதம் ஒரு மிதுனமாயிற்று’ (492)- ‘தொழப்படும்

*சென்னை ஸ்ரீநிகேதந முத்ராக்ஷரசாலையில் கலி 5004-ம் வருஷத்தில் அச்சிடப்பட்ட ஈடு ஸ்ரீகோசப்படி பக்கங்கள் அங்கங்கே குறிக்கப்பட்டுள்ளன.

பொருள் ஒரு மிதுனமே (529). 'பட்டர் காலக்ஷேப கோஷ்டியில் ஒரு கிழவர் வந்து தண்டனிட்டு நாராயணாவென்று சொல்லி உட்கார, பட்டர் 'ஓய் வ்ருத்தரே! நம் ஆழ்வார் பரிஸரத்தில் ப்ரஹ்மசாரி எம்பெருமான் பெயர் சொல்வாரில்லைகாணும்! த்வயத்தைபாரும்' என்று ஸாதித்தாராம்' (537)-என்றுபலவிடங்களில் பிராட்டியின்பெருமை காட்டப்படுகிறது. 'வேறிமாருதபூமேலிருப்பாள் வினை தீர்க்குமே' என்றவிடத்தில் மோக்ஷப்ரதத்வம் பெரியபிராட்டிக்கு அஸாதாரணகார்யம் எனப்பட்டது. திருவாய்மொழி ஆரும்பத்து 10-ம் திருவாய்மொழி 10-ம் பாட்டின் உரையில் 'நித்யவாஸம் பண்ணுகிற- இதனால் த்வயத்தில் பூர்வகண்டத்தில் மதுப்பில் விவக்ஷிதமான நித்யயோகமிங்கு சொல்லப்படுகிறது' என்றும் காண்கிறது.

வார்த்தாமாலையிலும் 'ஆச்ரயண ப்ரதிஸம்பந்தி ஒரு மிதுனம்; சேஷத்வப்ரதிஸம்பந்தி ஒரு மிதுனம்; கைங்கர்யப்ரதிஸம்பந்தி ஒரு மிதுனம்'- 'ஸ்த்ரீத்வம் கர்மோபாதிகமல்ல. 'யௌவகுவாதன' என்கிறபடியே ஸ்வேச்சாகல்பிதம்,. 'பரஸ்வரூபம் மிதுனம்'-ஈச்வரஸ்வரூபம் ஸ்ரிய:பதித்வம்' என்று அங்கங்கே தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறே ஈட்டிலும் முமுக்ஷுப்படியிலும் அகாரார்த்தம் எம்பெருமானும் பெரியபிராட்டியுமென்று பலவிடங்களில்; சொல்லப்படுகிறது. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் முதலான ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிக க்ரந்தங்களிலும் மேலே சொல்லப்பட்ட பெரியபிராட்டியின் பெருமை பல ப்ரமாணங்களால் ஸ்தாபிக்கப்பட் டிருக்கிறது.

ஆகையால் பெரியபிராட்டி ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் இவைகட்கும் மோக்ஷத்திற்கும் காரணமென்றும், விபு, ஈச்வர தத்வமென்றும் நிர்ணயமாய் ஏற்படுகிறது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ப்ரஹ்லாத சரித்ரம்

[ஸ்ரீ. உப. கோ. ஸுதர்சனாசாரியர், ரிடயர்ட் தமிழாசிரியர், அவளூர்.]

சீர்பெறு திருநெய்த் தானச் செழும்பதி தன்னில் வந்த
பேரரு ளாள னெம்மான் பெருந்தகை பிரமஞானி
காரொளி வண்ணன் கண்ணன் கழலிணை மறவாத் தூயன்
ஏர்சட கோப ராமா னுசனடி யிறைஞ்சி வாழ்வாம்.

ஸ்ரீவைஷ்ணவமதத்தில் சிறந்த மெய்யடியார்களெனக் கொண்டாடப்பட்டுவரும் ஆழ்வார்கள் பன்னிருவரில் திருமங்கையாழ்வாரால் மங்களாசாஸநம் பண்ணப்பட்ட திவ்யதேசங்கள் பல. அவற்றுள் வடநாட்டுத் திருப்பதிகள் பன்னிரண்டனுள் ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரமெனப்படும் சிங்கவேள்குன்ற மென்பதொன்று. இந்த க்ஷேத்ரத்தில் ககராஜனென்னும் கருடாழ்வானுடைய தவத்தினால் மேன்மை பெற்று விளங்கும் கருடாசலம் என்றும் ஒரு மலை உண்டு. அது மூன்று யோஜனை நீளமும், மூன்று யோஜனை விஸ்தாரமுமுள்ளதாம். அம்மலை ஸ்ரீந்ருஸிம்ஹனுடைய ஸாந்நித்யத்தை யடைந்திருப்பதால், அத்தலத்திற்கு வீரக்ஷேத்ரமென்றும் பெயருண்டாம். இம்மலை அஸுரேந்த்ரனாகிய ஹிரண்யகசிபு ராஜ்யபாரம் பண்ணுங்காலத்தில் அவன் மாளிகைக்குத் தூணாக அமைந்திருந்ததாம். பிறகு அது தகர்க்கப்பட்டுக் காலக்ரமத்தில் மலையாகி விட்டதாம். அம்மலையின் மத்யப்ரதேசத்தில் ஸ்ரீஜ்வாலாந்ருஸிம்ஹன் தமது வஜ்ராயுதம் போன்ற நகஜாலங்களால் ஹிரண்யகசிபுவின் மார்பைப் பிளந்து கொன்று ஸமீபத்திலுள்ள ஒரு நீர்நிலையில் தமது திருக்கைகளை அலம்பினாராம். அப்போது அந்நீர் முழுதும் ரக்தமயமாகிச் செந்நிறங்கொண்டு விளங்கிற்றாம். ஆதலால் அதற்கு ரக்தகுண்டம் எனப் பெயராம். ஹிரண்யனை ஸம்ஹரித்தபின்னரும் சீற்றமடங்காத அந்த சீயத்துக்கு சாந்தி உண்

டாவதற்காகத் தேவர்கள் கங்கையைக் கொண்டுவந்து திருமஞ்ஜனம் செய்தார்களாம். அந்தத் தீர்த்தம் ஸம்ஸாரதாபங்களையும் நீக்க வல்ல மஹிமை வாய்ந்ததென்று நிச்சயித்து ரிஷிகள் அதற்குப் பவநாசினீ என்று பெயர் வைத்தார்களாம். இவைகள் யாவும் ப்ரஹ்மாண்டபுராணத்தில் ஸ்ரீ அஹோபிலக்ஷேத்ர மாஹாத்ம்யத்திற் கூறப்பட்ட விஷயங்கள்.

இத்தகைய பெருமைவாய்ந்த ஸ்ரீ அஹோபிலக்ஷேத்ரத்தில் ஸ்ரீந்ருஸிம்ஹன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கிறார். ஹிரண்யகஶிபு எவ்விடத்தில் ராஜ்யபாரம் செய்தானென்பதும், எவ்விடத்தில் அவன் ஸ்ரீந்ருஸிம்ஹனால் ஸம்ஹரிக்கப்பட்டானென்பதும், எவ்விடத்தில் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்குப் பகவான் ஸ்ரீந்ருஸிம்ஹரூபியாய் ஸேவை ஸாதித்து அருள் புரிந்தானென்பதும் நிர்ணீதமாக நமக்கு நன்கு விளங்கவில்லை. ஆனால் ஒன்பதுரு நரசிங்கனுகந்துறையுந் திருப்பதி ஸ்ரீ அஹோபிலமென்றும், ப்ரஹ்லாதசரித்ர ஸம்பந்தமாக வழங்கிவரும் ஒவ்வொரு கதையும் அஹோபில பர்வதத்தில் பற்பல ப்ரதேசத்தில் நடந்ததாகச் சில அத்தாட்சிகள் காணப்படுவதாலும், பெரும்பாலும் ஸ்ரீந்ருஸிம்ஹாவதாரம், ஹிரண்யஸம்ஹாரம் முதலியன அந்த க்ஷேத்ரத்திலேதான் நடந்திருக்கலாமென மஹான்கள் அபிப்ராயப்படுகிறார்கள். மேலும்,

'அங்கண் ஞாலமஞ்ச அங்கோ ராளரியா யவுணன்
பொங்க வாகம் வள்ளுகிரால் போழ்ந்த புனிதனிடம்'
'அலைத்த பேழ்வாய் வாளெயிற்றோர் கோளரி யாயவுணன்
கொலைக்கை யாளன் நெஞ்சிடந்த கூருகி ராளனிடம்'
'எவ்வும் வெவ்வேல் பொன்பெயரோ னேதல னின்னுயிரை
வவ்வி யாகம் வள்ளுகிரால் வகிர்ந்தவம் மானதிடம்'

என்றிவைமுதலான திருமங்கையாழ்வார் பைந்தமிழ்ப் பாடலும் இந்த வ்ருத்தாந்தத்தை வலியுறுத்தும். அன்றியும் ஸ்ரீசிங்கப்பிரான் முன்னிலையில் ப்ரஹ்லாதாழ்வான் அர்ச்சாரூபியாக அங்கு ஸேவை ஸாதிக்கிறார். நமக்குத் தெரிந்தவரையில் எந்தத் திவ்யதேசத்திலும் பெருமாள் இவ்வண்ணம் ஸேவை ஸாதிப்பதாகத் தெரியவில்லை. ஆகவே பாகவதாக்ரேஸரனான ப்ரஹ்லாதாழ்வான் சரித்ரத்துக்கென்றே ஸ்ரீமதஹோபிலம் பெருமாள் உவந்த திவ்யதேசமாகின்றது. அவனது சரித்ரம் சொல்வோரையும் கேட்போரையும் பாவநமாக்கும் புண்ய சரித்ரமாதலால் அதைச் சிறிது விளக்குவோம்.

முன்னொரு காலத்தில் காச்யபர் என்ற முனிவர் ஒருவர் இருந்தார். அவருக்கு அதிதி, திதி, தநு, அரிஷ்டை, ஸுரஸை, கஷை, ஸுரபி, விநதை, தாம்ப்ரை, க்ரோதவசை, இளை, கத்ரு, முநி என்ற பதிமூன்று பார்யைகள் இருந்தனர். இவர்களுள் அதிதி என்பவளிடமாக இந்த்ரன், விஷ்ணு முதலிய பன்னிரு ஆதித்யர்களும் மற்றும் பல தேவர்களும் உண்டானார்கள். திதி என்பவளிடத்தில் ஹிரண்யகஶிபு, ஹிரண்யாக்ஷன் என்னும் இரண்டு ஆண்குழந்தைகளும், ஸிம்ஹிகை என்னும் கந்நிகையும் ஆகிய மூவர் ஜனித்தார்கள். இவர்களுள் ஹிரண்யாக்ஷன் ஒருஸமயம் தன் வலிமையால் பூமியைப் பாயாகச் சுருட்டி எடுத்துக்கொண்டு கடலில் மூழ்கி ஒளிந்துவிட, எம்பெருமான் மஹாவராஹரூபியாய்த் திருவவதரித்துக் கடலினுட்புகுந்து அவ்வஸுரனைத் தேடி அவனிடம் போர் செய்து அவனைக் கொன்றொழித்தார். [பாதாள லோகத்தில் அவன் கொண்டுவைத்திருந்த பூமியைத் தம் கோட்டினாற் குத்திக் கொணர்ந்து மீண்டும் விரித்தருளினார்.] இந்த வகையில் ஹிரண்யாக்ஷனுக்கு மரணம் நேர்ந்தது.

ஹிரண்யகஶிபு என்பான் தன் உடல் வலியால் மிகுந்த செருக்குக்கொண்டு, ஸ்வர்க்கம் மத்யம் பாதாளம் எனும் மூவுலகங்களையும் தன்னதாக்கிக்கொண்டு யாவரையும் துன்புறுத்தி வந்தான். சின்னாட் சென்றதும் அவ்வஸுரேந்த்ரன் மந்தரபர்வதம் சென்று கடுந்தவம் செய்து வந்தான். இவனது கடுந்தவத்துக் குவந்து ப்ரஹ்மதேவர் அவனிடம் எழுந்தருளி 'அஸுரேசா! உன் தவத்துக்கு மெச்சினேன்; அருந்தவத்தில் நின்னை யொப்பார் நீயன்றி யொருவரில்லை; வேண்டும் வரங்கேள்.' என்றார். அப்போது அஸுரர்தலைவன்,

'தேவராலு மவுணராலும் நிருதராலும்
தேரிவினேண்
காவலாள ராலும்சித்த ராலுங்காணும்
விஞ்சையர்
யாவராலு மானுடங்கள் விலங்குபுட்கள்
யாவுமாம்
தாவராதி யாலுமாயு தங்களாலும் தணிவிலா'

'இல்லினும் புறத்தினும் மிடத்தினும்
வலத்தினும்
எல்லினும் மிருட்டினும் மிடத்தினும்
பதத்தினும்
கல்லினும் சலங்கனல்கால் தன்னினுஞ்சீர்
கற்புளார்
சொல்லினுஞ்சா காமையின்று சோற்றியத்த
வென்றனன்'

[ஸ்ரீபாத்மோத்தரபுராணம்- நரமடங்கலெழுந்த படலம்]

[தாத! தேவராலும், அவுணராலும், நிருதராலும், எண்டிசைக் காவலாளராலும், ஸித்த வித்யாதரர்களாலும், மனிதராலும், விலங்கு புட்கள் ஸ்தாவரங்களாலும், ஆயுதங்களாலும், ஈரமுள்ளதினாலும், ஈரமில்லாததினாலும், 'கல் நீர் கனல் காற்று முதலியவற்றாலும், கற்புள்ள மாதர் ருஷிகள் முதலியோர் இடும் சாபத்தினாலும், வீட்டின் உட்புறத்திலும், வெளிப்புறத்திலும், பகலிலும், இரவிலும் நான் இறவாதபடி வரந்தந்தருள்க] என்றான். ப்ரஹ்மதேவர் அங்ஙனமே வரமருளிச் சென்றார்.

ஹிரண்யன் இவ்வாறு அருந்தவம்செய்து பெருவரங்கள் பெற்றுத் தலையெடுத்துச் செருக்கி, உலகத்திலே எவரும் பழைய க்ரமப்படி வேதமோதுதலும், மந்த்ரஜபங்கள் செய்தலும், யாகங்கள் புரிதலும், தெய்வங்களை வழிபடுதலும் கூடாவென்றும், தன்னையே தெய்வமாகக் கொண்டு அனைவரும் துதித்து வழிபடவேண்டுமென்றும், கட்டளையிட்டு, அவ்வாணை தவறாமல் எங்கும் செல்லுமாறு பார்த்துவந்தான். அப்போது வேதம் முதலியவை யாவும் இருந்தவிடம் தெரியா தொழிந்தன. ஆக்கல், அளித்தல், அழித்தல் தொழில்களுக்குரிய ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரர்கள் தமது செயல்களைக் கைக்கொள்ளாது விட்டனர். யோகிகள் தங்கள் யோகபலத்தால் அடையக்கூடிய பதவிகளை இழந்தனர். தேவர்கள் யாவரும் ஹிரண்யனுடைய பாதங்களைப் பூசிப்பாராயினர். இது இங்ஙனமாக:

ஹிரண்யன் தவத்தின் பொருட்டு மந்தர பர்வதம் சென்றிருக்குங்கால் அவனுடைய பத்நி கயாதுதேவி கர்ப்பிணியாயிருந்தாள். ஹிரண்யன் இல்லாததைக் கண்ட இந்த்ரன் தேவர்கள் புடை சூழ அவனது நகரம் நண்ணி அஸுரர்களுடன் பொருது, அவர்களை நாற்புறமும் பயந்தோட வடித்து, ஹிரண்யனது அரண்மனையையும் நாசஞ்செய்து, கர்ப்பிணியாயிருந்த கயாதுதேவியையும் சிறைப்படுத்திக் கொண்டுபோனான். அப்போது வழியில் தற்செயலாய் தேவர்ஷியான நாரதபகவான் எதிர்ப்பட்டார்; இந்த்ரனால் கொண்டுபோகப் பட்டுப் பயத்தால் கதறிக்கொண்டிருக்கும் கயாதுவைப் பார்த்தார். அவர் உடனே இந்த்ரன் அருகில் வந்து, 'தேவராஜனே! நிரபராதியான இவளைக் கொண்டுபோக நீர் அர்ஹரல்லர்; இவள் மஹாபதிவ்ரதை; உடனே விட்டுவிடும்; இச்செயல் தகாது' என்றார். அதற்கு இந்த்ரன், 'ஸ்வாமீ! இவளுடைய கர்ப்பத்தில் தேவர்களுக்கு ஶத்ருவாகத்தக்க மஹாவீரன் இருக்கிறான். ப்ரஸவ பர்யந்தம் கயாது என்னிடம் இருக்கவேண்டும். ப்ரஸவமான பிறகு அந்த சிசுவைக் கொன்றுவிட்டு இவளை விட்டுவிடுகிறேன்' என்றான். இதைக் கேட்ட நாரதர், 'தேவேந்த்ரா! இவள் கர்ப்பத்திலிருப்பவன் தேவஶத்ருவல்லன்; பரமபாகவதன்; பிதாவின் குணங்களைக் கொள்ளாதவன்; இயற்கையில் நற்குண நற்செய்கைகள் வாய்ந்தவன்; மஹாத்மா; மஹாபலிஷ்டன்; உம்மால் அவன் மரணத்தையடையமாட்டான்' என்றார். நாரதரிடம் தனக்குள்ள பக்தியால் அவர் சொற்களைப் பஹுமானித்துப் பாகஶாஸநன் கயாது தேவியை அங்கேயே விட்டுவிட்டுத் தன்னுலகம் போயினான். நாரதரும் கயாதுவைத் தமது ஆச்ரமத்துக்கு அழைத்துக் கொண்டுபோய், இனிய மொழிகளால் அவளுக்குத் தேறுதல்கூறி, ஹிரண்யகஶிபு தபஸ் முடிந்து திரும்பும்வரையில் தமது ஆச்ரமத்திலேயே அவளை வைத்துக்கொண்டிருந்தார். அப்போது கயாது தான் இச்சித்தகாலத்தில்

ப்ரஸவம் உண்டாகும்பொருட்டும், குழந்தையின் க்ஷேமத்தின் பொருட்டும், நாரதருக்கு மிகுந்த பக்தியுடன் பணிவிடை செய்துகொண்டு வந்தாள். அதன்பயனால் அவளுக்கு நாரதமுனிவரின் பூர்ணாநுக்ரஹம் கிடைத்தது. அவளுடைய வ்யஸநம் தீருமாறு தர்மத்தின் ஸ்வரூபத்தையும், பிறக்கப்போகிற ப்ரஹ்லாதனை யுத்தேசித்துப் பகவத்பக்திரூபமான ஜ்ஞாநத்தையும் அவளுக்கு உபதேசம் செய்தார் மஹர்ஷி. இந்த உபதேசமானது முனிவரின் அநுக்ரஹபூர்வகமாக ப்ரஹ்லாதனுக்குக் கர்பத்திலே கிடைத்து அவன் கருவிலே திருவுடையவனானான். பின்னர் நாரதர் அவளை ஹிரண்யனுடைய க்ருஹத்தில் சேர்ப்பித்தார். சின்னாள் சென்றதும் கயாது மஹாபாகவதசிகாமணியான ப்ரஹ்லாதாழ்வானைப் பெற்றாள்.*

திருத்துழாய் முளைக்கும்போதே மணத்துடன் அங்குரிப்பதுபோல் ப்ரஹ்லாதன் பிறக்கும்போதே பகவத்பக்தி பாகவதபக்தி முதலிய கல்யாணகுணங்களோடு பிறந்தான். தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர்.

குழந்தை பிறந்த செய்தியைக் கேட்ட ஹிரண்யகசிபு ஊரெங்கும் விழாக்கொண்டாடும்படி முரசறைவித்து மிக்க சிறப்புடன் தன் ஆசிரியரைக்கொண்டு ஜாதகர்மம் முதலிய ஸம்ஸ்காரங்களைச் செய்வித்துக் குழந்தையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக அன்புடன் வளர்த்து வந்தான்.

ப்ரஹ்லாதன் குழந்தையாயிருக்கும்போதே மநஸ்ஸைப் பகவானிடம் செலுத்தி ஜடன்போலிருந்துகொண்டு பாலர்கட்குரிய விளையாட்டில் மனமில்லாதவனாய்ப் பகவத்யாநம் செய்வான். பகவானைச் சிந்தையிற்கொண்டு தன்தேஹதர்மங்களை மறந்து உருகியமனத்துடன் ஒருவேளை அழுவான்; ஒருவேளை ஆநந்தமடைந்து சிரிப்பான்; கோவிந்தன் குணங்களை உச்சஸ்வரத்தில் பாடுவான்; ஆடுவான்; பகவானுடைய ஸ்மரணாதிசயத்தால் அவனாகவே தன்னை யெண்ணிக்கொண்டு அவனைப்போல் நடிப்பான். ஆநந்த பாஷ்பத்தைப் பெருக்குவான். தன்கண்களை மூடிக்கொண்டு சிலகாலம் புளகாங்கிதனாய் ஒன்றும் பேசத்தோன்றாது சும்மா விருப்பான்.

ஐந்து வயதானதும் ஹிரண்யன் ப்ரஹ்லாதனுக்குத் தன் குருவைக்கொண்டு கல்வி கற்பிக்கும்படி திட்டமிட்டான். அஸுர புரோஹிதரான சுக்ராசார்யரின் குமாரர்களான சண்டாமர்க்கர் அஸுரபாலர்க்குக் கல்வி கற்பித்தார்கள். உலகவழக்கப்படி ப்ரஹ்லாதன் பாடங்களை உபாத்யாயரிடங்கேட்டு அவர் சொல்லியவற்றைத் தானும் சொன்னானாயினும் அவற்றை மஹாபுத்திமானான அவன் உயர்ந்த மொழிகளாக எண்ணவில்லை. சில காலங்கழிந்ததும் ப்ரஹ்லாதன் சண்டாமர்க்கர்களுடன் தன் பிதாவினிடம் சென்றான்; பிதாவின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். அவ்வாறு வீழ்ந்து வணங்கின ப்ரஹ்லாதனை ஹிரண்யகசிபு எடுத்து மார்புறத்தழுவி 'குழந்தாய்! இத்தனை நாளாய் உனது குரு உனக்கு அன்புடன் கற்பித்த விஷயங்களிலே ஸாரமானவற்றைச் சொல்; கேட்க விரும்புகின்றேன்' என்றான். அதற்கு ப்ரஹ்லாதன்,

'ச்ரூயதாம் தாத! வக்ஷ்யாமி
ஸாரமேதம் தவாஜ்ஞயா ।
ஸமாஹிதமநா பூத்வா
யந்மே சேதஸ்யவஸ்திதம் ॥
அநாதிமத்யாந்தமஜம் அவ்ருத்திக்ஷயமச்யுதம் ।
ப்ரணதோஸ்ம்யந்தஸந்தாநம் ஸர்வகாரண
காரணம் ॥

[அப்பா! ஸாரபூதமென யாதொன்று என் மநஸ்ஸில் உண்டோ, அதை உனது ஆஜ்ஞையால் சொல்லுகிறேன். கவனித்துக்கேளும். ஆதிமத்யாந்த ரஹிதனும், ப்ரக்ருதி ஸம்பந்தத்தாற் பிறப்பற்றவனும், வ்ருத்தி க்ஷயம் முதலான விகாரமில்லாதவனும், சாச்வத

* ஹிரண்யனுக்கு அநுலாதன், ஆஹ்லாதன், ப்ரஹ்லாதன், ஸம்ஹ்லாதன் எனும் நான்கு பிள்ளைகள் பிறந்து பல பராக்ரமசாலிகளாய் தைத்யவம்சத்தை அபிவ்ருத்தியாக்கினார்கள். அவர்களுள் ப்ரஹ்லாதன் ஜிதேந்த்ரியனாய், மஹாபாகவதனாய் ஸ்ரீமந்நாராயணனிடம் பரமமான பக்தியைச செய்து ஜகத்திலே ப்ரஸித்தனாய் விளங்கினான்.

னும், ஸர்வ ஸம்ஹார கர்த்தாவாகவும் ஸ்திதி கர்த்தாவாகவும் இருப்பவனும், எல்லாக்காரண வஸ்துக்களுக்கும் காரணமாக இருப்பவனுமான அச்யுதனை நமஸ்கரிக்கிறேன்] என்றான்.

இச்சொற்கள் நாஸ்திகதமனான ஹிரண்ய கஶிபுவின் காதில் விழுந்தன. கோபத்தால் கண்சிவந்து உதடு துடிக்கச் சண்டாமர்க்கர்களை நோக்கி, 'ப்ராஹ்மணாதமர்களே! என்னை இவன் அவமதிப்பதுமன்றி, என் ஶத்ருவையும் ஸ்துதி செய்கின்றானே! இப்படிப்பட்ட விஷயங்களை ஏன் இவனுக்குக் கற்பித்தீர்கள்? என வினவினான். அவர்கள் 'தைத்யேச்வரா! கோபங்கொள்ளாதீர். உமது புத்ரன் நாங்கள் உபதேசித்ததைச் சொல்லவில்லை; தனக்குத் தோன்றினபடி சொல்லுகிறான்' என்றனர். அதுகேட்ட ஹிரண்யன் 'குழந்தாய்! ப்ரஹ்லாதா! உபாத்தியாயர் உனக்கு இவ்வாறு உபதேசிக்கவில்லை யென்று சொல்லுகிறாரே, மற்று யார் உனக்கு இவ்வாறு போதித்தார்? என, ப்ரஹ்லாதன்,

'விண்ணுளார் பெருமா னான விழியுளார்க்
கிலனாய் ஞானக்
கண்ணுளார் காண நின்றான் அவன் பெயர்
யானே கற்றேன்'

[ஊனக்கண்களுக்குப் புலனாகாதவனும், ஜ்ஞானக்கண்ணுக்கே புலனாகிறவனுமான விண்ணுளார்பெருமானது திருநாமத்தை (அவனருளினால்) யானே தெரிந்து சொன்னேன்.] மேலும்:

'ஶாஸ்தா விஷ்ணுரஶேஷஸ்ய
ஜகதோ யோ ஹ்ருதிஸ்தித:।
தம்ருதே பரமாத்மாநம்
தாத க: கேந ஶாஸ்யதே॥'

[அப்பா! எவன் ஸர்வ பூதங்களுடைய ஹ்ருதயத்திலுமிருக்கின்றானோ, அந்த விஷ்ணுவே குரு; அவரே யாவர்க்கும் புத்தியைக் கற்பிக்கிறவர்; பரமாத்மாவான அவரைத்தவிர்த்து வேறு யார் கற்பிக்கிறவர் இருக்கிறார்கள்?] என்றான். அதைக்கேட்ட ஹிரண்யன், 'துர்புத்தியுள்ளவனே! உலகத்துக்கு ஈச்வரன் நான்; என் முன்னிலையில் பயமில்லாமல் எவனையோ அடிக்கடிப் பலவிதமாய்த் துதிக்கிறாயே! அந்த விஷ்ணுவென்பவன் யார்?' என்றான். அதற்கு ப்ரஹ்லாதன்,

'ந ஶப்தகோசரம் யஸ்ய
யோகித்யேயம் பரம்பதம்।
யதோ விஶ்வம் ஸ்வயம் விஶ்வம்
ஸ விஷ்ணு: பரமேஶ்வர:॥'

[யோகிகளால் த்யானிக்கத்தக்க யாருடைய பரம ஸ்வரூபமானது வாக் முதலான இந்த்ரியங்களுக்கு எட்டாதோ, எவனாலே லோகமெல்லாம் உண்டாயிற்றோ, எவன் விச்வத்தையே தன் ரூபமாக உடையவனோ, அந்தப் பரமேச்வரனை விஷ்ணுவென்று அறியும்] என்றான். இதைக்கேட்டவுடன் அவன் பிதா 'அடே! மூடா! நானிருக்கும்போது பரமேச்வரனென்னும் பெயருடையவன் வேறு எவன் இருக்கிறான்? நீ அழிந்துபோவதற்கே பலவிதமாய் என்முன்னே எவனையோ துதிக்கிறாய்' என்று சொல்ல ப்ரஹ்லாதன் 'அப்பா! பரமேச்வரனான அந்த விஷ்ணு எனக்கு மாத்ரமன்று; உமக்கும் எல்லா ப்ரஜைகளுக்கும் போஷகராகவும் கர்த்தாவாகவுமிருக்கிறார். ஏன் கோபங்கொள்கின்றீர்? கோபங்கொள்வதில் பயனில்லை; ஶாந்தராயிரும்' என்றான். இதைக் கேட்டான் ஹிரண்யன். அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. 'இவன் மேல் தப்பில்லை. எவனோ பாபி ஒருவன் இவன் ஹ்ருதயத்தில் புகுந்து இவனை இப்படி ஆக்கிவிட்டான். அதனால்தான் இவன் இப்படிப்பட்ட இழிவான சொற்களைச் சொல்லுகிறான்' என நினைத்துத் தன் அருகிலிருந்த அஸுரர்களைப் பார்த்து 'இவனைக் குருவினிடம் விட்டு நன்றாய் போதிக்கும்படி சொல்லுங்கள்' என உத்திரவிட்டனுப்பினான். ப்ரஹ்லாதன் குருவுக்குப் பணிவிடை செய்துகொண்டு வித்யாப்யாஸம் செய்துவந்தான்.

ஒருநாள் சண்டாமர்க்கர் ப்ரஹ்லாதனைக் கனிவுடன்பார்த்து ப்ரியவசநங்களால், 'அப்பா! ப்ரஹ்லாதா! உனக்கு மங்களமுண்டாகட்டும். நிஜத்தைச்சொல்; பொய் சொல்லாதே. நீயோ அறியாத பாலகன். ஆனால் பாலர்களுக்கிருக்கிற புத்தி உனக்கில்லை. இந்த விபரீத புத்தி உனக்கு எப்படி வந்தது? அயலார் யாரேனும் வந்து உன் புத்தியைக் கெடுத்துவிட்டார்களா? அல்லது தானாகவே உனக்கு இந்தத் துர்புத்தி

உண்டாயிற்று? உண்மையைச்சொல்' என்றனர்.

ப்ரஹ்லாதன் அதுகேட்டு 'மஹான்களே! ஒருவரும்வந்து என் புத்தியைக் கெடுக்கவுமில்லை; எனக்கு விபரீத புத்தியும் கிடையாது. ப்ரஹ்மவாதிகளான நான்முகன்முதலானோரும் எந்தப் பரமாத்மாவின் ஸ்வரூபவிமர்சனத்தில் மோஹத்தை யடைகின்றனரோ, அவரே என் ஹ்ருதயத்தில் இருந்துகொண்டு புத்தியைப் பேதம் செய்கின்றார். காந்தசக்தியினால் இரும்பு சலிப்பதுபோல, என் மநஸ்ஸும் மாதவன் அருளால் சலிக்கிறது; அதாவது விகாஸத்தை யடைகிறது' என்றான். ஆசிரியர் அது கேட்டு 'அடேபாவி! நீ குலத்துக்குக் கோடாலிக்காம்பு; குருவின் வார்த்தை கடந்த காதுகன்' என்று அவனைப் பலவாறு பழித்து, முன்போல் வித்தை கற்பித்து வந்தார். அந்த குருக்களையும் ஹிதோபதேசத்தால் திருத்தி நல்வழிக்குக் கொண்டுவருவதற்கென்றே ப்ரஹ்லாதன் அவர்களிடம் வித்யாக்ரஹணம் செய்து வந்தான். (தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஆஸ்திக்யம்

[10-வது ஸம்புடம் 1-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

என்று சொல்லுகிற சாஸ்த்ரத்தில் நம்பிக்கையாகிற ஆஸ்திக்யத்தினாலும்- இதே விஷயத்தை இந்த்ரனாக இருந்து மலைப்பாம்பு ரூபத்தை அடைந்த நஹுஷமஹாராஜன்

'ஸுப்ராஜ்ஞமபி வெஉரூஷமைச்வர்யம் வ்யாமோஹயதே நரம்। தஸ்யாஹமேவ ச்ரேஷ்டாம் க்ஷாந்தி கதிம் கத: ॥'

[மிகவும் அறிவுடையவனையும்கூட ஐச்வர்ய மானது மோஹிக்கும்படி செய்துவிடும். நான் அந்த ஐச்வர்யத்தினாலேயே இந்த துர்க்கதியை அடைந்தேன். அது எல்லோரையும் மோஹிக்கச் செய்து கெடுத்துவிடும்] என்று ஐச்வர்யமதத்தினாலேயே மதிமயங்கிச் சகுனியோடு சூதாடப்போய் மஹாபோகங்களை யெல்லாம் இழந்து வநவாஸநிரதனான தர்மபுத்ரனைப் பார்த்து 'நீ தன்னை மறந்து என்னைக்குறித்து 'என் தப்பான கார்யத்தைச் செய்தாய்' என்று கேட்பது உசிதமோ?' என்று சொன்னதைப் பார்த்தும் முத்கலன் அதிகமான அர்த்தலம்பாதனத்திற்கு ஹேதுவான வாணிஜ்யாதி ஜீவநோபாயங்கள் ப்ராஹ்மணனை நம்முடைய மதியைக்கெடுத்து தர்மநாசத்தைப் பண்ணி அதன்மூலமாக உலகத்திற்கும் நாசத்தை உண்டாக்கிவிடுமென்று பயந்து அந்த ஜீவநோபாயங்களை அநாதரித்து ஸிலோஞ்சவ்ருத்தியானன் என்கிறார். இதனால் முத்கலனுக்கு தர்மவிஷயத்திலிருக்கும் ஆஸ்திக்யத்தின் பெருமை சொல்லப்பட்டதாகிறது.

இனி தர்மாத்மா என்று சொல்லப்பட்டதாய் முத்கலனால் அநுஷ்டிக்கப்பட்ட தர்மஸ்வரூபங்களைச் சொல்லுகிறது- ஸத்யவாதி தைத்திரீயோபநிஷத்தில் ஆசார்யன் சிஷ்யன் செய்யவேண்டிய காரியங்களை உபதேசிக்குமிடத்தில் முதலில் ஸத்யதர்மத்தைச் சொல்லுகையாலும் மேலும் ஸத்யம் வத தர்மம் சர ஸத்யம் என்று ஸத்யத்தை இரட்டித்து ஓதுகையாலும்

'ஸத்யமேவ ப்ரவக்தவ்யம் பாராவயம் விஜாநதா। தீர்த்தயாத்ரா ஸஹஸ்ராணி ஸர்வே யஜ்ஞா நவாஸ்ய ச। ஜோதிஷ்டோமாதி வா ஸத்ய ஸமோ ந ஸத்யந் ஜாநவ: ॥'

என்று ஆநுசாஸநபர்வத்தில் ஸத்யத்தை பலபடியாக ப்ரசம்ஸிக்கையாலும் ஸத்யதர்மம் முக்கியமானது. இங்கே ஸர்வதர்மாந்தரங்களுக்கும் உபலக்ஷணம்.

சமதமாதயக: என்று சொன்னது கௌதமர் சொன்ன மோக்ஷஹேதுவான ஆத்மகுணாந்தரங்களுக்கும் உபலக்ஷணம். ஆக தர்மாநுஷ்டாநத்தையும் ஆத்மகுணங்களையும் சொல்லுவதால் 'சீலவ்ருத்தபலம் ச்ருதம்' என்கிறபடியே தர்மாநுஷ்டாநம் ஆத்மகுணங்கள்

இவைகளுக்குக் காரணமான தத்வஜ்ஞாந ஸம்பத்தும் முத்கலனிடம் இருப்பதாகச் சொல்லப்பட்டதாகிறது.

இப்படி முத்கலனுடைய தர்மாநுஷ்டாநத்தில் ச்ரத்தையாகிற ஆஸ்திக்யத்தையும் ஆத்மகுணங்களையும் சொல்லி இதற்குமேல் இதன் பலமான தர்மாநுஷ்டாந விசேஷங்களைச் சொல்லுகிறார்.

‘சுதிஃவ்ரதீ க்ரியவாஂஶ்ச காவொதீம வ்ருத்திராஸ்தித:। ஸத்ரூஜிஷீக்ரூதம நாஜஸை வாஷெ ஜஹாதவா:॥’ என்று,

இதில் ஶ்ரோமத்தை உடைய மதுப்ரத்யயாந்தமான க்ரியாவாந் என்கிற பதத்தினால் ஸ்ம்ருதிகளினால் விதிக்கப்பட்ட ஸகல நித்ய கர்மங்களையும் ஒன்றையும் விடாமல் செய்வது சொல்லப்படுகிறது.

ஸத்ரூஜிஷீக்ரூதஞாஜ என்பதினால் ச்ருதிகளினால் விதிக்கப்பட்ட ச்ரௌத தர்மாநுஷ்டாநம் சொல்லப்படுகிறது. ஜஷீக்ரூதம என்பதினால் மநுஸ்ம்ருதி அத்யாயம் 4-ல் ‘வதபஂஶ்ச ஸியொஷுஹ்ஜிஹொத்ரவ ராயண: உஷீ: வவயநாஜியா: கெவஜா: நிவபெவ ஜ ஸதா।’ என்று ஸிலோஞ்சவ்ருத்தியான த்விஜன் அக்நிஹோத்ரம் தர்சபூர்ணமாஸாக்ரயணேஷ்டிகளை மாத்திரம் செய்யவேணும். மற்றும் பசுயாகம் ஸோமயாகம் முதலிவைகளைச் செய்யக்கூடாது என்று சொல்லியிருப்பதினால் அந்த மநுவசனத்தின்படி ஸிலோஞ்சவ்ருத்தியான முத்கலன் அநுஷ்டாநம்செய்தது சொல்லப்படுகிறது.

சுதிஃவ்ரதீ என்பதனால் ந கஞ்சந வஸதௌ ப்ரத்யாசக்ஷீத। ‘தத்வ்ரதம்’ என்கிற ச்ருதியின்படியே பசியினால் வருந்தி க்ரஹஸ்தன்வீடு தேடிவந்து ஆஹாரம் கேட்ட அதிதியை ‘இடம்பையாலடர்ப்புண்டிடுமினோ துற்றென்றிரந்தவர்க்கில்லையே’ என்று நெடுஞ்சொலால் மறுத்த நீசனேனக்தோ நினைக்கிலேன் வினைப்பயன் தன்னை கடுஞ்சொலார் கடியார் காலனார் தமரால் படுவதோர் கொடுமிறைக்கஞ்சி நடுங்கி நான் வந்துன் திருவடி யடைந்தேன்’ என்கிற பாசுரத்தில் சொல்லுகிறபடி இல்லையே என்று சொல்லாமல் தத்வ்ரதம் என்று ஓதுகிறபடியே அதிதிக்கு அவச்யம் அந்நமிடவேண்டியது என்று தீர்மானித்திருப்பதோடு ப்ரசம்ஸார்த்த ‘ஊநி’ ப்ரத்யயாந்தமான ‘வ்ரதீ’ என்கிற பதத்தினால் ‘அதிதிதேவோ பவ’ என்கிற ச்ருதியின்படியே வந்த அதிதியை இஷ்டதெய்வத்தைப்போல உபசரித்து அந்நமிடுவதை வ்ரதமாகவும் ஸங்கல்பித்து அப்படியே அவன் நடத்துவது சொல்லப்படுகிறது.

‘காபோதீம் வ்ருத்திமாஸ்தித:’ என்கிற வாக்யத்தினால் புறாவைப்போல ஜீவிக்கிறவன் என்று சொல்லப்பட்டதாகிறது. அதாவது புறாவானது நெல்விளைந்த இடங்களில் சிந்திக்கிடக்கிற நெல்லை ஒவ்வொன்றாகவே தனது வாயினால் கொத்தி எடுத்து ஜீவிப்பது போல காடுகளில் தானாக விளைந்த நெற்கதிர்களை ஒவ்வொன்றாக எடுத்தும் அது கிடைக்காத காலங்களில் வீடுகளில் ஒவ்வொரு முஷ்டி (பிடி)யாக தான்யங்களைப் பிச்சை எடுத்தும் ஜீவிக்கிறவன் என்கிற விஷயம் சொல்லப்படுகிறது.

இதனால் ‘பரமாபத்கதஸ்யாபி தர்மே மம மதிர்பவேத்’ [மிகவும் கொடியதான ஆபத்காலத்திலும் என் மனது தர்மம் செய்வதிலேயே ஆசையுள்ளதாயிருக்கவேண்டும்] என்று வரம் கேட்டுக்கொண்ட விபீஷணன் போலன்றிக்கே அப்படி வரம் வாங்காமலே முத்கலன் மஹாதரித்ர தசையிலும் வந்தவருக்கெல்லாம் அந்நதாநம் செய்வதையே வ்ரதமாகப் பூண்டிருந்ததனால் அவனுக்கு தர்மாநுஷ்டாநத்திலிருக்கும் ஆஸ்திக்யம் வெளியிடப்படுகிறது.

‘ஜஹாதவா:’ என்கிறதினால் தரித்ரனை தன்ஸ்வரூபத்திற்கு அநுகுணமாக மற்றும்பல தர்மங்களை தேஹச்ரமங்களை ஸஹித்துக்கொண்டு முத்கலன் செய்துகொண்டிருந்தது சொல்லப்படுகிறது. ‘அதாதாரம் தரித்ரம் ச ...॥’

[தாநம் செய்யாத தநிகனையும் தேகேந்த்ரியங்களின் கஷ்டங்களைப் பொறுத்துக்கொண்டு தர்மாநுஷ்டாநங்களைப் பூர்ணமாக அநுஷ்டிக்காத தரித்ரனையும் அரசன் அவ்விருவர் கழுத்திலும்

பெரிய பாறாங்கல்லைக் கட்டி நடுஸமுத்ரத்தில் தள்ளிவிடவேண்டியது] என்று சாஸ்த்ரம் தர்மம்செய்யாதவர்களை நிந்திக்கிறது.

மேலும் ‘நயோபார்ஜிதவ்யயதே தாதவ்யமெந ப்ரீதிநோ ஹாஹமெ:। ந்யாயமெவ்யயயா ஸமெக்ஷ்: ப்ரஸாவமெதஸ்த ஷ்ருதி॥’ [ந்யாயமான வழியினுல் கிடைத்த அல்ப த்ரவ்யங்களை ச்ரத்தையோடு தாநம் செய்வதினுல் தர்மதேவதை எப்படி ஸந்தோஷத்தை அடையுமோ அப்படி ந்யாயவிருத்தமான வழியினுல் கிடைத்த மிகுந்த த்ரவ்யங்களை தாநம் செய்வதனுல் தர்மதேவதை ஸந்தோஷத்தை அடைவதில்லை.] என்கிறபடியே முத்கலன் செய்த தர்மங்கள் எல்லாம் சிறியதாக இருந்தாலும் அவனுல் அவைகள் அதிக ச்ரத்தையோ சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட க்ரமங்களோடும் செய்யப்பட்டனவாகையினுல் அவைகள் பெரிய தர்மங்களாக ஆதரிக்கப்பட்டதை ‘மஹாதபா:’ என்றபதம் ஸூசிக்கிறது. இந்த விஷயத்தைக் குறித்து ‘ஸம்யகுபாஸ்தே’ நன்ருக அநுஷ்டித்தான் என்கிறது. உபாஸ்தே என்று சொல்வதனுல் தெய்வத்தை உபாஸிப்பதுபோல தர்மங்களை ப்ரீதியோடநுஷ்டித்தான் என்கிருர். ஸிலோஞ்சவ்ருத்தியான முத்கலன் வந்த அதிதிகளுக்கெல்லாம் அந்ந தாநம் அவச்யம் செய்கிறது என்கிற வ்ரதத்தை எப்படி அநுஷ்டிக்கமுடியும்? என்கிற சங்கைக்கு ஸமாதாநம் மஹாதபா: என்கிற பதத்தினுலும்,

‘ஸபுத்ரதாரோ ஹி முநி: பக்ஷாஹாரோ பபூவ ஸ:’ என்கிற மேல் வாக்யத்தாலும் சொல்லப்படுகிறது. மஹாதபா: என்பதில் தபஸ் என்பது சரீரத்தை கஷ்டப்படுத்துகிற கார்யமாகையினுல் அதிதிகளுக்கு அந்நமிடுவதாகிற தர்மத்தை அநுஷ்டிப்பதற்காக தனது தேஹத்தினுல் முடியாத கார்யங்களைச் செய்தான் என்று சொல்லுகிருர். அங்ஙனன்றிக்கே தானும் பத்நியும் புத்ராதிகளும் புஜிப்பதற்காக வைத்திருந்த ஆஹாரங்களையும் கூட வந்த அதிதிகளுக்குக் கொடுத்துவிட்டு மிகுந்த ஸ்வல்ப அந்நத்தையோ அல்லது காட்டில் வஸிப்பவர்களைப்போல காய் கிழங்குகளையோ புஜித்து அதனுல் தேஹத்தில் மாம்ஸபாகமே இல்லாமல் எலும்பும்தோலுமாக இருந்ததைக் குறித்து மஹாதபா: என்கிருர். இப்படி தர்மாநுஷ்டானத்தில் ஆஸ்திக்யத்தினுலே தான் பட்டினிகிடந்து இளைத்தது மாத்திரமன்றிக்கே பத்நீ புத்ராதிகளுடைய ஆஹாரத்தையும் அதிதிகளுக்குக் கொடுத்து அவர்களுடம்பும் எலும்பும் தோலும் மிச்சமாக இருந்ததைக் குறித்து ‘ஸபுத்ரதாரோ ஹி முநி: மஹாதபா:’ என்று சொல்லுகிருர். இங்கு பத்நீ புத்திரர்களோடு க்ருஹஸ்ததர்மத்திலிருந்தவனைக் குறித்து முநி: என்று சொல்வதால் காட்டில் வஸிக்கிற மஹர்ஷிகளைப்போல, ஆஹாரமில்லாத காலத்தில் காய் கிழங்குகளினுல் ஜீவித்தான் என்று தோன்றுகிறது. இதனுல் முத்கலனுக்கும் அவனுடைய பத்நீ புத்ராதிகளுக்கும் தர்மாநுஷ்டாந விஷயத்திலிருந்த ஆஸ்திக்யத்தின் மஹிமை சொல்லப்பட்டதாகிறது. இவ்வுலகத்தில் தர்மாநுஷ்டாநத்தில் அதிக ஆஸ்தையுள்ள மனிதன் தான் பட்டினி கிடந்தாவது தர்மத்தை அநுஷ்டிப்பது ஸம்பாவிதமாகலாம். பத்நீ புத்ராதிகளுங்கூட பர்த்தா பிதாவினுடைய தர்மஸங்கல்பத்தை நிறைவேற்றுவதற்காகப் பட்டினி கிடந்து தங்களுடைய தேஹத்தை கெடுத்துக்கொண்டார்கள் என்பது ஸம்பாவிதமாகுமோ என்கிற சங்கைக்கு மஹாதபா: என்று முத்கலன் முன் ஜன்மங்களில் பண்ணின புண்ய விசேஷத்தினுல் அது ஸம்பாவிதமென்று பரிஹாரம் சொல்லுகிறதாகச் சொல்வதும் பொருத்தமாகும்.

‘பக்ஷே பக்ஷே கதா ப்ரீஹி த்ரோணம் ஸமுபார்ஜயத்। இஷ்டிம் வை தர்சமாஸாக்ஷ்யம் ஸர்வபுத்ர ஸஹிதஸ்ஸ:॥ தேவதாதிதிஸேஷேண குர்வந்தி காலயாபநம்’ [அந்தமுத்கலன் கொஞ்சம் கொஞ்சமாக தான்யங்களை ஸம்பாதிக்கிறதான கபோதவ்ருத்தியினுலே பதினைந்து நாள்களில் இரண்டு மரக்கால் நெல்லை ஸம்பாதித்து அதனுலே பதினைந்து நாளுக்கு ஒருமுறை தர்சேஷ்டியையும், பூர்ணமாஸேஷ்டியையும் பண்ணி அந்த இஷ்டிகளில் தேவதை

களுக்கு ஹோமம் செய்து மிகுந்த அந்நத்தினல் வந்த அதிதிகளை உபசரித்து அதிதிகள் புஜித்து மிகுதியாக இருந்த அந்நத்தை பத்நீபுத்ரர்களோடு தானும் புஜித்து வந்தான்.]

தஸ்யேந்த்ர: ஸஹிதோ தேவை: ஸாக்ஷாத் த்ரிபுவனேஶ்வர: | ப்ரத்யக்ருஹ்ணான் மஹாராஜ பாகம் பர்வணி பர்வணி ||

[அந்த முத்கலன்செய்த தர்சபூர்ணமாஸேஷ்டிகளில் மூன்று உலகங்களுக்கும் ஈச்வரனை தேவேந்தரன் மற்றும் தேவர்களோடு வந்து தன்னுடைய ஹவிர்ப்பாகத்தைத் தானே நேராக வாங்கிக்கொண்டு போனன்.]

ஸ பர்வகாலம் க்ருத்வா து முனிவ்ருத்த்யா ஸமன்வித: | அதிதிப்யோ ததாவன்னம் ப்ரஹ்ருஷ்டேனாந்தராத்மனா ||

[அந்த முக்கலன் இஷ்டி கார்யங்களை முடித்துவிட்டு அதிதிகள் அதிகமாக வந்த ஸமயத்தில் பக்வமான அந்நங்களை எல்லாம் அவர்களுக்கு கொடுத்துவிட்டு மிகுந்த அந்நமில்லாத ஸமயத்தில் காய்கிழங்குகளை புஜித்து வருத்தப்படாமல் ஸந்துஷ்டமான மனத்தோடேயே இருந்தான்.]

வ்ரீஹித்ரோணஸ்ய ததஹோ தததோ(அ)ன்னம் மஹாத்மன: | ஶிஷ்டம் மாத்ஸர்யஹீனஸ்ய வர்த்ததே(அ)திதிதர்ஶனாத் || தச்சதான்யபி புஞ்ஜந்தி ப்ராஹ்மணானாம் தபஸ்விநாம் | முனேஸ் த்யாகவிஶுத்த்யா து தத்தன்னம் வ்ருத்திம்ருச்சதி ||

[அந்த முத்கல ரிஷி மனத்தில் வருத்தமில்லாமல் அதிதிகளுக்கு அந்நமிடுவதில் அதிக ச்ரத்தையோடு கொடுத்ததால் இரண்டு மரக்கால் நெல்லினுடைய அரிசியினல் பக்வம் செய்யப்பட்ட அந்நமானது கொஞ்சமாக இருந்தாலும் அது அதிகமாகவந்த அதிதிகள் பூர்ணமாக புஜிக்கும்படி வ்ருத்தியடைந்தது. பசியோடு வந்த ப்ராஹ்மணர்கள் நூறுபேர்கள் வரையில் அப்படி வ்ருத்தியடைந்த அந்நத்தை புஜித்து த்ருப்தியடைந்தார்கள்.]

தம் து ஶுஶ்ராவ தர்மிஷ்டம் முத்கலம் ஸம்ஶிதவ்ரதம் | துர்வாஸா ந்ருப திக்வாஸாஸ் தமதாப்யாஜகாம ஹ || பிப்ரச்சானியதம் வேஷம் உன்மத்த இவ பாண்டவ | விகச: பருஷான் வாசோ வ்யாஹரன் விவிதான் முனி: || அபிகம்யாத தம் விப்ரம் உவாச முனிஸத்தம: | அன்னார்த்தினமனுப்ராப்தம் வித்தி மாம் முனிஸத்தம ||

[இப்படி சுத்தமான மநஸ்ஸோடு ஸர்வோத்க்ருஷ்டமான தர்மத்தை அநுஷ்டிக்கிறவனும் அந்நதான தர்மத்தில் த்ருடமான ஸங்கல்பமுள்ளவனும் அதனல் மிகவும் இவ்வுலகத்தில் விசேஷ ப்ரஸித்தியடைந்தவனும் இருந்த முத்கலனை (பரீக்ஷை பண்ணுவதற்காக) துர்வாஸா: என்கிற ரிஷியானவர் கௌபீநமாத்ரத்தைத் தரித்தவராய் பைத்தியம் பிடித்தவனைப்போல மாறுவேஷம் தரித்தவராய் சிகை கச்சம் இல்லாதவராய் கேட்கப்பிடிக்காத கடினமான பற்பல வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு முத்கலனைப் பார்த்து ‘ஓ ப்ராஹ்மணோத்தமனே! நான் ஆஹாரம்சாப்பிடுவதற்காக உம்மிடம் வந்திருக்கிறேன்’ என்று சொன்னர்.] இங்கு துர்வாஸஸ் ரிஷியை ப்ராஹ்மணவேஷத்தோடு வராமல் சிகை கச்சம் வஸ்த்ரமில்லாமலும் கடுஞ்சொற்களோடும் வந்ததாகச் சொன்னது முத்கலன் அனுதரித்து அந்நமிடாமலிருப்பதற்கு ஹேதுவாக.

ஸ்வாகதம் தே(அ)ஸ்த்விதி முனிம் முத்கல: ப்ரத்யபாஷத | பாத்யமாசமனீயம் ச ப்ரதிபாத்யான்னமுத்தமம் || ப்ராதாத் ஸ தாபஸாயான்னம் க்ஷுதிதாயாதிதிவ்ரதீ | உன்மத்தாய பராம் ஶ்ரத்தாமாஸ்தாய ஸ த்ருதவ்ரத: ||

[‘அன்னஸ்ய க்ஷுதித: பாத்ரம்’ என்கிறபடியே அந்நதானம் பண்ணுவதற்கு வந்தவன் பசியோடு இருக்கிருனு என்கிற ஓர் விஷயந்தான் கவனிக்கப்படவேண்டும் என்கிற சாஸ்த்ரார்த்தத்தை முத்கலன் அறிந்தவனுகையினலே, வந்த அதிதிகளுக்கு அவச்யம் அந்நம் போடவேண்டியதென்கிற தன் வ்ரதம் குலைந்து போகாதபடி அந்த மஹர்ஷியைப் பார்த்து ‘ஸுகமாக வந்தீரா’ வென்று விசாரித்துவிட்டு அவருக்கு அர்க்யம் பாத்யம் ஆசமனீயங்களைக் கொடுத்து, பசியோடு வந்தவராய் பைத்தியம் பிடித்தவரைப்போலிருக்கிற அவரைக்குறித்து அதிகமான ச்ரத்தையோடு ஷட்ரஸங்களோடு

கூடின உத்தமமான ஆஹாரத்தைக் கொடுத்தான்.]

ததஸ்த்வந்நம் ரஸவத் ஸ ஏவ க்ஷுதயாந்வித: । புபுஜே க்ருத்ஸ்நமுந்மத்த: ப்ராதாத்தஸ்மை ச முத்கல: ॥ புக்த்வா சாந்நம் ததஸ்ஸர்வம் உச்சிஷ்டேநாத்மநஸ்தத: । அதாநுலிலிபேऽங்காநி ஜகாம ச யதாகத: ॥

[பசியினால் வருந்தினவர்போலும் பைத்தியம் பிடித்தவர்போலும் வேஷம் பூண்டிருந்த துர்வாஸா ரிஷியானவர் ஷட்ரஸங்களுடன் கூடின அந்த அந்நம் முழுவதையும் ஒருவரே புஜித்துவிட்டார். முத்கலனும் தங்களுக்கு சாப்பிட அந்நம் வைத்துக்கொள்ளாமல் முழுவதையும் துர்வாஸாவுக்கே கொடுத்துவிட்டான். பிறகு துர்வாஸாவானவர் தாமே எல்லாவந்நத்தையும் புஜித்துவிட்டு தன்னுடைய எச்சிலான வந்நத்தினால் தன்னுடம்பில் பூசிக்கொண்டு திரும்பிப்போய்விட்டார்.

'ஏவம் த்விதீயே ஸம்ப்ராப்தே பர்வகாலே மநீஷிண: । ஆகம்ய புபுஜே ஸர்வம் அந்நம் உஞ்சோபஜீவிந: ॥'

[அப்படியே துர்வாஸாரிஷியானவர் அடுத்த பர்வகாலத்திலும் முத்கலனிடம் வந்து எல்லா அந்நத்தையும் மிகுதியில்லாமல் புஜித்துவிட்டுப்போனார்.]

நிராஹாரஸ்து ஸ முநி: உஞ்சமார்ஜயதே புந: । ந சைநம் விக்ரியாம் நேதும் அசகந் முத்கலம் க்ஷுதா । ந க்ரோதோ ந ச மாத்ஸர்யம் நாவமாநோ ந ஸம்ப்ரம: । ஸபுத்ரதாரமுஞ்சந்தம் ஆவிவேச த்விஜோத்தமம் ॥

[அந்த முத்கலன் அந்நமயமான ஆஹாரமில்லாமலே காய்கிழங்குகளினால் ஜீவித்துக்கொண்டு உஞ்சவ்ருத்தியினால் தர்மங்களை அநுஷ்டித்து வந்தான். இப்படி முத்கலன் பசியோடு வருத்தப்படும்போதும் உத்தமங்களான குணங்களோடிருந்தபடியினால் அவனுக்கு துர்வாஸாவினிடத்தில் கோபம் மாத்ஸர்யம் முதலான துர்குணங்களுண்டாகவில்லை.]

ததா தமுஞ்சதர்மாணம் துர்வாஸா முநிஸத்தமம் । உபதஸ்தே யதாகாலம் ஷட்க்ருத்வ: க்ருதநிச்சய: । ந சாஸ்ய மநஸ: கிஞ்சித் விகாரம் தத்ருசே முநி: । சுத்தஸத்த்வஸ்ய சுத்தம் ஸ தத்ருசே நிர்மலம் மந: ॥

[அப்படியே துர்வாஸாரிஷியானவர் முத்கலனை பரீக்ஷிப்பதற்காகவே ஆறுதடவை பர்வகாலங்களில் முத்கலன் வீட்டிற்கு வந்து எல்லா அந்நங்களையும் அவனும் பத்நீ புத்ரர்களும் புஜிப்பதற்கில்லாமல் புஜித்துவிட்டுப் போனார். இப்படிப் பலதடவை தன்னை ச்ரமப்படுத்தின தன்னிடத்தில் ஸத்வகுணம் நிறைந்த முத்கலனுடைய மனஸ் கோபம் முதலிய தோஷமில்லாமல் மிகவும் சுத்தமாக இருந்ததை துர்வாஸரிஷி ஸாக்ஷாத்தாகப் பார்த்தார்.]

தமுவாச தத: ப்ரீத:
ஸ முநிர்முத்கலம் ததா ।
த்வத்ஸமோ நாஸ்தி லோகேऽஸ்மிந்
தாதா மாத்ஸர்யவர்ஜித: ॥
க்ஷுத்தர்மஸம்ஜ்ஞாம் ப்ரணுததி
ஆததே தைர்யமேவ ச ।
ரஸாநுஸாரிணீ ஜிஹ்வா
கர்ஷத்யேவ ரஸாந் ப்ரதி ॥
ஆஹாரப்ரபவா: ப்ராணா:
மநோ துர்நிக்ரஹம் சலம் ।
மநஸச்சேந்த்ரியாணாம் சாப்யைகாக்ர்யம்
நிச்சிதம் தப: ॥
ச்ரமேணோபார்ஜிதம் த்யக்தும்
து:கம் சுத்தேந சேதஸா ।
தத்ஸர்வம் பவதா ஸாதோ
யதாவதுபபாதிதம் ॥
ப்ரீதா: ஸ்மோऽநுக்ருஹீதாச்ச
ஸமேத்ய பவதா ஸஹ ।
இந்த்ரியாபிஜயோ தைர்யம்
ஸம்விபாகோ தம: சம: ॥
தயா ஸத்யம் ச தர்மச்ச
த்வயி ஸர்வம் ப்ரதிஷ்டிதம் ॥

[தொடரும்]

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ ஸ்தவம்

[ஸ்ரீ. உப. மேல்பாக்கம் நரஸிம்ஹாசார்யர், வ்யாகரணத்யாபகர்,
ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]

ஸ்ரீபாஷ்யகாரர் திருவடிகளில் அசஞ்சலமான பக்தியையுடையவரான 'ஸ்ரீவத்ஸாங்கமிச்ரர்' என்று ப்ரஸித்திபெற்ற கூரத்தாழ்வான் லோகாநுக்ரஹார்த்தமாகச் செய்தருளின ஸ்ரீஸ்தவத்திற்கு யதாமதி அர்த்தத்தை விஜ்ஞாபித்துக்கொள்ளுகின்றேன்.

𑌶𑍍𑌰𑍀𑌵𑌤𑍍𑌸𑌚𑌿𑌹𑍍𑌨𑌮𑌿𑌶𑍍𑌰𑍇𑌭𑍍𑌯𑍋 𑌨𑌮 𑌉𑌕𑍍𑌤𑌿𑌮𑌧𑍀𑌮𑌹𑍇 ।
𑌯𑌦𑍁𑌕𑍍𑌤𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑍀𑌕𑌣𑍍𑌠𑍇 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌮𑌙𑍍𑌗𑌳𑌸𑍂𑌤𑍍𑌰𑌤𑌾𑌮𑍍 ॥
[ஸ்ரீவத்ஸசிந்ஹமிச்ரேப்யோ நம உக்திமதீமஹி|
யதுக்தயஸ் த்ரயீகண்டே யாந்தி மங்களஸூத்ரதாம்||]

(அ-ம்) யதுக்தய:—யாதொரு கூரத்தாழ்வானுடைய ஸ்தோத்ரங்கள், த்ரயீ—உபநிஷத்தாகிற ஸ்த்ரீயின், கண்டே—கழுத்தில், மங்களஸூத்ரதாம்—திருமங்கல்யமாக யிருக்குந் தன்மையை, யாந்தி—அடைந்ததோ, (அப்படிப்பட்ட) ஸ்ரீவத்ஸசிந்ஹமிச்ரேப்ய:—கூரத்தாழ்வானின் பொருட்டு, நமஉக்திம்—நம: என்கிற வார்த்தையை, அதீமஹே—அத்யயநம் பண்ணுகிறோம்.

(க) இது ஸ்ரீஸ்தவத்தை அருளிச்செய்த ஸ்ரீ கூரத்தாழ்வானுடைய தனியன். இவரால் செய்யப்பட்ட அருளிச் செயல்கள் உபநிஷத் பாகத்திற்கு மங்களஸூத்ரங்கட்டியதுபோ லிருக்கின்றன. இவ்விதம் ஆச்சர்யமாகச் செய்தருளிய ஸ்ரீவத்ஸசிந்ஹமிச்ரர் என்கிற கூரத்தாழ்வானின் பொருட்டு நமஸ்காரம் செய்கின்றோம்.

ஆளவந்தார் சதுச்லோகியை யநுஸரித்தது இந்த க்ரந்தம். இதில் ஸமஸ்தமான சேதநர்களாலும் பகவத்ஸமாச்ரயணம் பண்ணும்போது புருஷகாரமாக முதலில் ஸமாச்ரயணீயையான பெரியபிராட்டியை ஸ்தோத்ரம்செய்யத் திருவுள்ளம்பற்றிய ஸ்ரீவத்ஸாங்கமிச்ரர் முதல்ச்லோகத்தில் நிர்விக்நபரிஸமாப்த்யாதி ப்ரயோஜநார்த்தமாய் ஆசீர்வசநரூபமான மங்களத்தைச் செய்தருளுகிறார்—

𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌰𑍍𑌦𑌿𑌶𑌤𑌾𑌦𑌶𑍇𑌷𑌜𑌗𑌤𑌾𑌂 𑌸𑌰𑍍𑌗𑍋𑌪𑌸𑌰𑍍𑌗𑌸𑍍𑌥𑌿𑌤𑍀𑌃
𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌂 𑌦𑍁𑌰𑍍𑌗𑌤𑌿𑌮𑌾𑌪𑌵𑌰𑍍𑌗𑌿𑌕𑌪𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌚 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍 𑌹𑌰𑌿𑌃 ।
𑌯𑌸𑍍𑌯𑌾 𑌵𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌮𑍁𑌖𑌂 𑌤𑌦𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌪𑌰𑌾𑌧𑍀𑌨𑍋 𑌵𑌿𑌧𑌤𑍍𑌤𑍇𑌽𑌖𑌿𑌲𑌂
𑌕𑍍𑌰𑍀𑌡𑍇𑌯𑌂 𑌖𑌲𑍁 𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑌾𑌽𑌸𑍍𑌯 𑌰𑌸𑌦𑌾 𑌸𑍍𑌯𑌾𑌦𑍈𑌕𑌰𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌯𑌾 ॥ (1)

[ஸ்வஸ்தி ஸ்ரீ: திசதாதசேஷஜகதாம் ஸர்கோபஸர்க ஸ்திதீ:
ஸ்வர்கம் துர்கதிமாபவர்கிகபதம் ஸர்வம் ச குர்வந் ஹரி: |
யஸ்யா வீக்ஷ்ய முகம் ததிங்கிதபராதீநோ விதத்தே(அ)கிலம்
க்ரீடேயம் கலு நாந்யதாஸ்ய ரஸதா ஸ்யாதைகரஸ்யாத்தயா||]

(அர்த்தம்) ஹரி:— ஸ்ரீமந்நாராயணன், அசேஷஜகதாம் — எல்லா உலகங்களுடைய ஸர்க்க—ஸ்ருஷ்டி, உபஸர்க்க— ஸம்ஹாரம், ஸ்திதீ:— ரக்ஷை இவைகளையும், ஸ்வர்க்கம்—ஸ்வர்க்கத்தையும், துர்க்கதிம்— நரகத்தையும், ஆபவர்க்கிகபதம்— மோக்ஷஸம்பந்தியான ஸ்தாநம் அதாவது பரமபதத்தையும், ஸர்வஞ்ச— மற்றுமுள்ள எல்லாவிதமான ஐஹிக ஆமுஷ்மிக போகங்களையும், குர்வந்— செய்கிறவராய்க்கொண்டு, யஸ்யா:— எந்த லக்ஷ்மியினுடைய, முகம்—

முகத்தை, வீக்ஷ்ய— பார்த்து, ததிங்கிதபராதீநः— அந்தந்த அர்த்தத்துக்கு ஸூசகமான அவளுடைய ப்ரூபங்காதிகளுக்குப் பரவசனாய்க்கொண்டு, அகிலம்—முன்சொல்லப்பட்ட ஸ்ருஷ்டி முதலான எல்லாவற்றையும், விதத்தே— செய்கிறானே; அந்யதா— இப்படியில்லாவிடில், அஸ்ய— இந்த பகவானுக்கு, தயா— அந்தலக்ஷ்மியோடு, ஐகரஸ்யாத்— ஸமானமான ப்ரியாப்ரியங்களை உடைத்தாயிருக்கிறபடியால், இடம்—இந்த, க்ரீடா—ஸ்ருஷ்டிமுதலான விளையாட்டானது, ரஸதா— ஆநந்தத்தைக் கொடுக்கக்கூடியதாக, ந ஸ்யாத்கலு— ஆகாதல்லவா? ஸா—அப்படிப்பட்ட, ஸ்ரீः—மஹாலக்ஷ்மி, ஸ்வஸ்தி—க்ஷேமத்தை, திசதாத்—கொடுக்கவேணும்.

(கருத்து) ஸமஸ்த உலகங்களைப் படைத்தும் ரக்ஷித்தும் ஸம்ஹரித்தும் வருகின்ற பகவான் உலகிலுள்ள ஜீவராசிகளுக்கு அவற்றின் புண்யபாபங்களுக் கநுணமாக ஐஹிக ஸுக துக்கங்களையும் ஆமுஷ்மிகமான ஸ்வர்க்கநரகங்களுடைய அநுபவங்களையும் பக்த்யாதிகளுக்கீடாக மோக்ஷத்தையும் கொடுக்கிறான். இந்த கார்யங்கள் பகவானுக்கு லீலைகளாக விருக்கின்றன. எம்பெருமானும் பிராட்டியும் ஸமமாக லீலையில் பங்கெடுத்துக்கொள்பவர்கள். அதாவது பிராட்டி எதை விரும்புகிறாளோ அதையே எம்பெருமானும் விரும்புகிறான். அவள் விரும்பாத விஷயத்தை இவனும் விரும்புவதில்லை. இப்படியிருக்கும்போது ஸ்ருஷ்டி முதலிய கார்யங்களையும் பிராட்டியின் அபிப்ராயத்தை அறிந்துகொண்டே செய்கிறபடியால், இவளுக்கு ஆச்ரிதர்களை அநுக்ரஹிக்கவேணுமென்கிற திருவுள்ளமிருந்தால் பகவானு மிரங்கி விடுவன் என்கிற உத்தேசத்தினால் ஆழ்வான், அப்படிப்பட்ட பிராட்டி நமக்கு ச்ரேயஸ்ஸைக் கொடுக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறார். * * * (1)

முன் ச்லோகத்தில் ப்ரார்த்திக்கப்பட்ட ச்ரேயஸ்ஸை மேல்ச்லோகத்தால் விவரிக்கிறார்:—

𑌹𑍇 𑌶𑍍𑌰𑍀𑌰𑍍𑌦𑍇𑌵𑌿 𑌸𑌮𑌸𑍍𑌤𑌲𑍋𑌕𑌜𑌨𑌨𑍀𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌸𑍍𑌤𑍋𑌤𑍁𑌮𑍀𑌹𑌾𑌮𑌹𑍇
𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌂 𑌭𑌾𑌵𑌯 𑌭𑌾𑌰𑌤𑍀𑌂 𑌪𑍍𑌰𑌗𑍁𑌣𑌯 𑌪𑍍𑌰𑍇𑌮𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌾𑌂 𑌧𑌿𑌯𑌮𑍍 ।
𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 𑌬𑌨𑍍𑌧𑌯 𑌨𑌨𑍍𑌦𑌯𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌮𑌿𑌮𑌂 𑌦𑌾𑌸𑌂 𑌜𑌨𑌂 𑌤𑌾𑌵𑌕𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌿 𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑌵𑍀𑌚𑌿𑌵𑌿𑌸𑍃𑌤𑍇𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌮 𑌚𑌾𑌮𑍀 𑌵𑌯𑌮𑍍 ॥ (2)

[ஹே ஸ்ரீ:தேவி ஸமஸ்தலோகஜநநீம் த்வாம் ஸ்தோதுமீஹாமஹே
யுக்தாம் பாவய பாரதீம் ப்ரகுணய ப்ரேமப்ரதாநாம்தியம் ।
பக்திம் பந்தய நந்தயாச்ரித மிமம் தாஸம் ஜநம் தாவகம்
லக்ஷ்யம் லக்ஷ்மி கடாக்ஷவீசிவிஸ்ருதேஸ்தேஸ்யாம சாமீ வயம் ॥]

(அ-ம்) ஹே ஸ்ரீः தேவி லக்ஷ்மி—எல்லோராலும் ஆச்ரயிக்கத்தகுந்து விளங்காநின்ற மஹாலக்ஷ்மியே! ஸமஸ்தலோகஜநநீம்—எல்லா உலகங்களுக்கும் மாதாவான, த்வாம்—உன்னை, ஸ்தோதும்—ஸ்தோத்ரம் செய்வதற்கு, ஈஹாமஹே— நாம் ப்ரயத்நிக்கிறோம்; ஆகையால், யுக்தாம்—ஸ்துதிசெய்வதற்குவேண்டிய, பாரதீம்—சொல்லை, பாவய—நீ உண்டுபண்ணவேணும்; ப்ரேமப்ரதாநாம்— ஸ்நேஹத்தை ப்ரதானமாய் உடைய, தியம்— புத்தியை, ப்ரகுணய— அபிவ்ருத்திசெய்யவேணும்; பக்திம்—உன்விஷயமான பக்தியை, பந்தய—நல்லதாகச் செய்யவேணும்; ஆச்ரிதம்— உன்னையாச்ரயித்த தாவகம் தாஸம்—உன்னுடைய அடிமையான, இமம் ஜநம்—என்னை, நந்தய—ஆநந்திப்பிக்கவேணும். அமீ வடம்ச— இந்த நாங்களும், தே—உன்னுடைய, கடாக்ஷவீசி— கடைக்கண்பார்வையாகிற அலைகளின், விஸ்ருதேः— பரவுவதற்கு, லக்ஷ்யம்ஸ்யாம—பாத்திரர்களாகவேணும்.

(கருத்து) ஹேலக்ஷ்மி! எல்லா உலகங்களுக்கும் தாயான உன்னை நான் ஸ்தோத்ரம்செய்ய ஆசைப்படுகிறேன். அதற்குவேண்டிய ஜ்ஞாநசக்திகள் எனக்குக்கிடையாது. ஆகையால் நீ

உன்னை ஸ்தோத்ரம் செய்யத்தகுந்த வாக்சக்தியையும், அந்த வாக்கிற்குக்காரணமான உன் கல்யாண குணங்களில் அதிக ஈடுபாட்டுடன் கூடின புத்தியையும், அந்த ஈடுபாட்டுக்கும் ஹேதுவான பக்தியையும் அநுக்ரஹிக்கவேணும். மேலும், பரம பக்திக்குப்பிறகு வரக்கூடிய ப்ரஹ்மாநந்தத்தையுங்கொடுத்து நித்யஸூரிகளைப்போல் எங்களையும் கடாக்ஷித்தருளவேணும்.

இப்படி ஸ்தோத்ரம்செய்யத்தகுந்த வாக் முதல் நித்யகைங்கர்யபர்யந்தமான தன்னபீஷ்டத்தை ப்ரார்த்தித்து, 'எல்லையில்லாத குணங்களையுடைய உன் விஷயத்தில் கவிஜநங்களுக்கபிமதமான ஸ்தோத்ரரசனை அடியோடு ஸம்பவிக்காது' என்கிறார்:—

𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌂 𑌨𑌾𑌮 𑌕𑌿𑌮𑌾𑌮𑌨𑌨𑍍𑌤𑌿 𑌕𑌵𑌯𑍋 𑌯𑌦𑍍𑌯𑌨𑍍𑌯𑌦𑍀𑌯𑌾𑌨𑍍 𑌗𑍁𑌣𑌾𑌨𑍍
𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌤𑍍𑌵𑌸𑌤𑍋𑌽𑌤𑌿𑌰𑍋𑌪𑍍𑌯 𑌫𑌣𑌿𑌤𑌿𑌸𑍍𑌸𑌾 𑌤𑌰𑍍𑌹𑌿 𑌵𑌨𑍍𑌧𑍍𑌯𑌾 𑌤𑍍𑌵𑌯𑌿 ।
𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌸𑌤𑍍𑌯𑌗𑍁𑌣𑌾𑌭𑌿𑌵𑌰𑍍𑌣𑌨𑌮𑌥𑍋 𑌬𑍍𑌰𑍂𑌯𑍁𑌃 𑌕𑌥𑌂 𑌤𑌾𑌦𑍃𑌶𑍀
𑌵𑌾𑌗𑍍𑌵𑌾𑌚𑌸𑍍𑌪𑌤𑌿𑌨𑌾𑌪𑌿 𑌶𑌕𑍍𑌯𑌰𑌚𑌨𑌾 𑌤𑍍𑌵𑌤𑍍𑌸𑌦𑍍𑌗𑍁𑌣𑌾𑌰𑍍𑌣𑍋𑌨𑌿𑌧𑍌 ॥ (3)

[ஸ்தோத்ரம் நாம கிமாமநந்தி கவய: யத்யந்யதீயாந் குணாந்
அந்யத்ர த்வஸதோ(அ)திரோப்ய பணிதிஸ்ஸா தர்ஹிவந்த்யா த்வயி ।
ஸம்யக் ஸத்யகுணாபிவர்ணநமதோ ப்ரூயு: கதம் தாத்ருசீ
வாக்வாசஸ்பதிநாபி சக்யரசநா த்வத்ஸத்குணார்ணோநிதௌ ॥

(அ-ம்) கவய: — கவிகள், கிந்நாம — எதை, ஸ்தோத்ரம் — ஸ்தோத்ரம் என்பதாக, ஆமநந்தி — சொல்லுகிறார்கள்? அந்யத்ர — வேறொரு இடத்தில் அதாவது ஸ்துதிக்கவேண்டிய இடத்தில், அஸத: — இல்லாததான, அந்யதீயாந் குணாந் — வேறு வஸ்துவிலிருக்கிற குணங்களை, அதிரோப்ய — ஆரோபித்து, பணிதி: — சொல்வது, இதியதி — என்று சொன்னால், தர்ஹி — அப்போது, ஸா — அப்படிப்பட்ட ஸ்தோத்ரம், த்வயி — உன்னிடத்தில், வந்த்யா — வீணாகும்; அதோ — அல்லது, ஸம்யக் — நன்றாக, ஸத்யகுண — உண்மையாயிருக்கிற குணங்களை, அபிவர்ணநம் — வர்ணிப்பதை, (ஸ்தோத்ரமாக) ப்ரூயு: — சொல்வார்களானால், தாத்ருசீ — அப்பேர்ப்பட்ட, வாக் — வார்த்தை, த்வத்ஸத்குணார்ணோநிதௌ — உன்னுடைய நல்லகுணங்களாகிற ஸமுத்ரவிஷயத்தில், கதம் — எப்படி, வாசஸ்பதிநாபி — ப்ருஹஸ்பதியினாலும், சக்யரசநா — செய்யமுடிந்ததாக ஆகும்.

(கருத்து) 'ஒருவரிடத்தில் இல்லாமல் வேறொருவரிடத்திலிருக்கும் குணங்களை இவரிடத்தில் இருப்பதாக வர்ணிப்பது ஸ்தோத்ரம்' என்று கவிகள் ஸ்தோத்ரலக்ஷணம் சொன்னால் அப்படிப்பட்ட ஸ்தோத்ரம், நீ எல்லை இல்லாத குணங்களை உடையவளாதலால், உன்னிடத்தில் இல்லாமல் வேறிடத்திலிருக்கும்படியான குணங்கள் கிடையாதாகையால், உன்னிடத்தில் ஸரிப்படாது. அல்லது 'ஒருவரிடத்திலிருக்கும் குணங்களை நன்றாக வர்ணிப்பது ஸ்தோத்ரம்' என்று சொன்னாலும் உன் எல்லையற்ற குணங்களை நன்றாக வர்ணிப்பது ப்ருஹஸ்பதிக்கும் அசக்யமாகையால் அதுவும் எப்படி முடியுமென்கிறார்.

இதில் '𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌯𑌾𑌯 𑌵𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑌿𑌸𑍍𑌸𑌾𑌹𑌿 𑌨 𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌃 𑌪𑌰𑌮𑍇𑌷𑍍𑌠𑌿𑌨𑌃' என்று இருக்கும் குணங்களைச் சொல்வது பகவானுக்கு 'ஸ்தோத்ரமாகாது' என்று காளிதாஸன் சொல்லியிருப்பதனால் வேறு வஸ்துவிலிருக்கும் குணங்களை ஆரோபித்துச் சொல்வது ஸ்தோத்ரம் என்று காளிதாஸனுக்கு அபிமதமான லக்ஷணம். இருக்கும் குணங்களை விஸ்தரித்து அழகாகச் சொல்வதுதான் ஸ்தோத்ரமென்கிற லக்ஷணந் தான் ஆழ்வானுக்கபிமதமென்று ஏற்படுகிறது. (3)

'இப்படி எல்லையற்ற என்னுடைய குணங்களை பூர்ணமாக வர்ணிக்க இயலாதாகையால், நீர் இந்த ஸ்தோத்ரத்திலிருந்து விரதராகவேண்டுமல்லாது ப்ரவர்த்திக்கலாமோ?' என்றால் அதற்கு ஸமாதானம் சொல்லுகிறார்:—

𑌯𑍇 𑌵𑌾𑌚𑌾𑌂 𑌮𑌨𑌸𑌾𑌂 𑌚 𑌦𑍁𑌰𑍍𑌗𑍍𑌰𑌹𑌤𑌯𑌾 𑌖𑍍𑌯𑌾𑌤𑌾 𑌗𑍁𑌣𑌾𑌸𑍍𑌤𑌾𑌵𑌕𑌾𑌃
𑌤𑌾𑌨𑍇𑌵 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌸𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌿𑌹𑍍𑌵𑌮𑍁𑌦𑌿𑌤𑌾 𑌹𑍈 𑌮𑌾𑌮𑌿𑌕𑌾 𑌭𑌾𑌰𑌤𑍀 ।
𑌹𑌾𑌸𑍍𑌯𑌂 𑌤𑌤𑍍𑌤𑍁 𑌨 𑌮𑌨𑍍𑌮𑌹𑍇 𑌨 𑌹𑌿 𑌚𑌕𑍋𑌰𑍍𑌯𑍇𑌕𑌾𑌽𑌖𑌿𑌲𑌾𑌂 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌕𑌾𑌂
𑌨𑌾𑌲𑌂 𑌪𑌾𑌤𑍁𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌗𑍃𑌹𑍍𑌯 𑌰𑌸𑌨𑌾𑌮𑌾𑌸𑍀𑌤 𑌸𑌤𑍍𑌯𑌾𑌂 𑌤𑍃𑌷𑌿 ॥ (4)

[யே வாசாம் மநஸாம் ச துர்க்ரஹதயா க்யாதாகுணாஸ்தாவகா꞉
தாநேவ ப்ரதி ஸாம்புஜிஹ்வமுதிதா ஹை மாமிகாபாரதீ।
ஹாஸ்யம் தத்து நமந்மஹே ந ஹி சகோர்யேகா(அ)கிலாம் சந்த்ரிகாம்
நாலம் பாதுமிதி ப்ரக்ருஹ்ய ரஸநாமாஸீத ஸத்யாம் த்ருஷி ॥]

(அர்த்தம்) ஹே லக்ஷ்மி. தாவகா꞉ — உன்னுடையதான, யே குணா꞉ — எந்த குணங்கள், வாசாம் — வாக்கிற்கும், மநஸாம்ச — மநஸ்ஸுக்கும், துர்க்ரஹதயா — க்ரஹிக்கமுடியாததாக, க்யாதா꞉ — ப்ரஸித்தமாயிருக்கின்றனவோ, தாநேவப்ரதி — அந்த குணங்களையே உத்தேசித்து, மாமிகா பாரதீ — என்னுடைய வாக்கானது, ஸாம்புஜிஹ்வம் — ஜலம் ஊறுகிற நாக்கை உடைத்தாயிருக்கும்படி, உதிதா — ப்ரவர்த்திக்கிறது; தத்து — அதை (அப்படி ப்ரவர்த்திப்பதை), ஹாஸ்யம் — பரிஹஸிக்கத்தக்கதாக, நமந்மஹே — நாம் எண்ணவில்லை. ஏகா சகோரீ — ஒரு பெண் சகோரபக்ஷி, த்ருஷி ஸத்யாம் — தாகமிருக்கும்போது, அகிலாம் — ஸமஸ்தமான சந்த்ரிகாம் — நிலாவையும், பாதும் — பாநம் செய்வதற்கு, நாலமிதி — ஸமர்த்தமில்லை என்று, ரஸநாம் — நாக்கை, ப்ரக்ருஹ்ய — அடக்கி, நாஸீத ஹி — இருக்கிறதில்லை அல்லவா?

(கருத்து) ஹே லக்ஷ்மி! உன்னுடைய குணங்கள் 'யதோ வாசோ நிவர்த்தந்தே' என்கிற ஶ்ருதியால் வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாதவையாகப் ப்ரஸித்தமானவை. அதில் என்னுடைய நாக்கு ரஸவிசேஷபுத்தியினால் ஸ்தோத்ரம் செய்யவேணுமென்று ஆவலுடன் ப்ரவர்த்திக்கிறது. இதுஸரியே, என்னென்றால்--சகோரபக்ஷி தாகம் எடுத்தால் நிலாவைப் பாநம் பண்ணும்; ஒரு சகோரபக்ஷி எல்லா நிலாவையும் நம்மால் பாநம் பண்ணமுடியாதென்று எண்ணி, தாகமிருக்கும்போது நாக்கை யடக்கிக்கொண்டு இருக்குமோ? எப்படி அது தாகசாந்திக்காக ப்ரவர்த்திக்கிறதோ அதுபோல நானும் ஸ்தோத்ரம் செய்யவேணுமென்கிற ஆசையினால் சக்திக்கு எட்டினவரை துதிப்பேனென்று ப்ரவர்திப்பது உசிதம்தான். * (4)

'ஸ்தோத்ரம் செய்பவனுக்கு நல்ல புத்தியும் பக்தியும் பக்தியினால் உண்டான சுச்ருஷாதிகளுமிருக்கவேணும். இந்த குணமுள்ளவர்களால் செய்யப்படவேண்டிய ஸ்தோத்ரத்தை மற்றவர்கள் செய்வது அவர்களுக்கு லஜ்ஜாவஹமன்றோ? அப்படி க்ஷுத்ரர்களால் ஸ்துதிக்கப்பட்டால் விஷயத்திற்குத்தான் தோஷமுண்டாகாதோ? ஆகையினால் நீர் ஸ்தோத்ரம் செய்வது உசிதமோ?' வென்கிற சங்கையை த்ருஷ்டாந்தத்தினால் பரிஹரிக்கிறார்:—

𑌕𑍍𑌷𑍋𑌦𑍀𑌯𑌾𑌨𑌪𑌿 𑌦𑍁𑌷𑍍𑌟𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌪𑌿 𑌨𑌿𑌃𑌸𑍍𑌨𑍇𑌹𑍋𑌽𑌪𑍍𑌯𑌨𑍀𑌹𑍋𑌽𑌪𑌿 𑌤𑍇
𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌂 𑌦𑍇𑌵𑌿 𑌵𑌿𑌹𑌙𑍍𑌗𑌹𑌂 𑌨 𑌚 𑌬𑌿𑌭𑍇𑌮𑍍𑌯𑌜𑍍𑌞𑍋 𑌨 𑌜𑌿𑌹𑍍𑌰𑍇𑌮𑌿 𑌚 ।
𑌦𑍁𑌷𑍍𑌯𑍇𑌤𑍍𑌸𑌾 𑌤𑍁 𑌨 𑌤𑌾𑌵𑌤𑌾 𑌨 𑌹𑌿 𑌶𑍁𑌨𑌾 𑌲𑍀𑌢𑌾𑌪𑌿 𑌭𑌾𑌗𑍀𑌰𑌥𑍀
𑌦𑍁𑌷𑍍𑌯𑍇𑌚𑍍𑌛𑍍𑌵𑌾𑌪𑌿 𑌨 𑌲𑌜𑍍𑌜𑌤𑍇 𑌨 𑌚 𑌪𑌿𑌬𑍇𑌤𑍍𑌯𑌾𑌰𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑍁 𑌶𑌾𑌮𑍍𑌯𑍇𑌚𑍍𑌛𑍁𑌨𑌃 ॥ (5)

[க்ஷோதீயாநபி துஷ்டபுத்திரபி நிஸ்நேஹோப்யநீஹோபி தே
கீர்த்திம் தேவி விஹங்கஹம் ந ச பிபேம்யஜ்ஞோ ந ஜிஹ்ரேமி ச।
துஷ்யேத்ஸா து ந தாவதா ந ஹி சுநா லீடாபி பாகீரதீ
துஷ்யேச்வாபி ந லஜ்ஜதே ந ச பிபேத்யார்திஸ்து சாம்யேச்சுந: ॥]

(அ-ம்) ஹே தேவி! க்ஷோதீயாநபி — மிகவும் அல்பனாயிருந்தபோதிலும், துஷ்டபுத்திரபி — கெட்ட

புத்தியை யுடையவனுகவிருந்தபோதிலும், நிஸ்நேஹோ(அ)பி- பக்தியில்லாதவனுக விருந்தபோதிலும், அகீஹோ(அ)பி-பக்தியின்கார்யமான கைங்கர்யாதிகளை உடையவனுகயில்லாமலிருந்தாலும், தே-உன்னுடைய, கீர்த்திம்-கீர்த்தியை, லிஹந்-ஆஸ்வாதநம் செய்துகொண்டிருக்கிற, அஜ்ஞ:-மூடனுன, அஹம்-நான், நசபிபேமி- பயப்படவுமில்லை, நஜிஹ்ரேமிச- வெட்கப்படவுமில்லை. ஸாது—அந்த கீர்த்தியும், தாவதா—அந்த என் ஆஸ்வாதநத்தினல், நதுஷ்யேத்-தோஷத்தை யடையாது. ஹி-எந்தகாரணத்தினல், சுநா- நாயினல், லீடாபி—நக்கிக் குடிக்கப்பட்டபோதிலும், பாகீரதீ—கங்கை, நதுஷ்யேத்—தோஷத்தை அடையாது, ச்வாபி-நாயும், நலஜ்ஜதே-வெட்கப்படுவதில்லை, நசபிபேதி-பயப்படுவதுமில்லை. சுந:-நாயினுடைய, ஆர்த்திஸ்து-தாகமோ, சாம்யேத்-தணிந்துவிடும்.

(க) ஹே தேவி! நான் அத்யல்பன். கெட்டபுத்தியுள்ளவன். எனக்கு பக்தியுமில்லை. ஆதலால் பக்தியின் கார்யமான கைங்கர்யாதிகளையும் செய்கிறேனல்லேன். ஆனுலும் அதிநீசமான நாய் மிகவும் (உயர்ந்ததான) பரிசுத்தமான கங்கைஜலத்தை வெட்கப்படாமலும் பயப்படாமலும் குடித்து தாகசாந்தியை எப்படி அடைகிறதோ, நாயின் ஸ்பர்சத்தினல் கங்கையும் எப்படி தோஷத்தை அடைகிறதில்லையோ அப்படியே நான் ஸ்தோத்ரம் செய்வதனல் உன் குணங்களுக்கு ஒரு கெடுதலும் வராது. என் ஸ்தோத்ராசைக்கு சாந்தியும் ஏற்படும். ஆகையினல் வெட்கத்தையும் பயத்தையும் விட்டு நான் இதில் ப்ரவர்த்தித்தேன். (5)

இப்படி ஸ்தோத்ரத்தினின்றும் நிவர்த்திப்பதற்குவந்த சங்கைகளை பரிஹரித்து ஸ்தோத்ரத்திலிறங்குகிறுர்:—

𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌂 𑌮𑌹𑌦𑍇𑌵 𑌵𑌾𑌲𑍍𑌪𑌮𑌥𑌵𑌾 𑌦𑍃𑌶𑍍𑌯𑍇𑌤 𑌪𑍁𑌂𑌸𑌾𑌂 𑌹𑌿 𑌯𑌤𑍍
𑌤𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌃 𑌸𑌮𑍁𑌦𑍀𑌕𑍍𑌷𑌣𑌾𑌤𑍍 𑌤𑌵 𑌯𑌤𑌸𑍍𑌸𑌾𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑌿𑌕𑌂 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌤𑍇𑌨𑍈𑌤𑍇𑌨 𑌨 𑌵𑌿𑌸𑍍𑌮𑌯𑍇𑌮𑌹𑌿 𑌜𑌗𑌨𑍍𑌨𑌾𑌥𑍋𑌽𑌪𑌿 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌃
𑌧𑌨𑍍𑌯𑌂 𑌮𑌨𑍍𑌯𑌤 𑌈𑌕𑍍𑌷𑌣𑌾𑌤𑍍 𑌤𑌵 𑌯𑌤𑌃 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ॥ (6)

[ஐச்வர்யம் மஹதேவ வால்பமதவா த்ருச்யேத பும்ஸாம் ஹி யத்
தல்லக்ஷ்ம்யாஸ்ஸமுதீக்ஷணத்தவ யதஸ்ஸார்வத்ரிகம் வர்த்ததே ।
தேனைதேந ந விஸ்மயேமஹி ஜகந்நாதோ(அ)பி நாராயண:
தந்யம் மந்யத ஈக்ஷணத்தவ யத: ஸ்வாத்மாநமாத்மேச்வர: ॥]

(அ-ம்) பும்ஸாம்—சேதநர்களுக்கு, ஸார்வத்ரிகம்—ஐஹிக ஆமுஷ்மிகங்களான, யதைச்வர்யம்—எந்த ஐச்வர்யமானது, மஹதேவவா—பெரியதாக, அதவா—அல்லது, அல்பம்—சிறியதாக, த்ருச்யேத—காணப்படுகிறதோ, தத்-அது, லக்ஷ்ம்யா:தவ—லக்ஷ்மியான உன்னுடைய, யதஸ்ஸமுதீக்ஷணத்—எந்த கடாக்ஷத்தினல், வர்த்ததே-ப்ரவர்த்திக்கிறதோ, தேந—அப்படிப்பட்ட(மஹிமையையுடைத்தான), ஏதேந—இந்த உன் கடாக்ஷத்தினல், நவிஸ்மயேமஹி- நாம் ஆச்சர்யப்படவில்லை. யத:—எந்தகாரணத்தினல், ஜகந்நாத:—உலகுக்கெல்லா மதிபதியாயும், ஆத்மேச்வர:- தனக்குத்தானே அதிபதியாயுமிருக்கிற, நாராயணேபி— ஸ்ரீமந்நாராயணனும், தவ—உன்னுடைய, ஈக்ஷணத்- கடாக்ஷத்தினல், ஸ்வாத்மாநம்- தன்னை, தந்யம் — தந்யனுக, மந்யதே— எண்ணுகிருனே.

(க) ஹே தேவி! உலகத்தில் ஒருவனுக்கு சின்ன பதவியோ அல்லது பெரிய பதவியோ வந்திருக்கிறது என்றுல் அது எல்லாம் உன்னுடைய கடாக்ஷத்தினல்தான் ஏற்படுகிறது என்பதில் ஒன்றும் ஆச்சர்யமில்லை. எல்லா உலகிற்குமதிபதியாய் தனக்கு மேலதிபதி ஒருவருமில்லை என்னும்படி நிற்கிற எம்பெருமானும் உன்கடாக்ஷத்தினல்தான் தன்னை உயர்ந்தவனுக எண்ணுகிருன். அப்படியிருக்க மற்ற பதவிகளுக்கு உன்னுடைய கடாக்ஷம் காரணமென்பதில் என்ன ஆச்சர்யமிருக்கிறது? (6)

* * * *

நல்லதான எல்லா வஸ்துக்களுக்கும் 'ஸ்ரீ:, ஸ்ரீமத்' என்கிற சப்தங்களினுல் வ்யவஹாரம் உன்கடாக்ஷாயத்தமென்கிறார்:—

𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌂 𑌯𑌦𑌶𑍇𑌷𑌪𑍁𑌂𑌸𑌿 𑌵𑌿𑌦𑌿𑌤𑌂 𑌸𑍌𑌨𑍍𑌦𑌰𑍍𑌯𑌲𑌾𑌵𑌣𑍍𑌯𑌯𑍋𑌃
𑌰𑍂𑌪𑌂 𑌯𑌚𑍍𑌚 𑌹𑌿 𑌮𑌙𑍍𑌗𑌲𑌂 𑌕𑌿𑌮𑌪𑌿 𑌯𑌲𑍍𑌲𑍋𑌕𑍇 𑌸𑌦𑌿𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑍍𑌵𑌦𑌧𑍀𑌨𑌮𑍇𑌵 𑌯𑌦𑌤𑌃 𑌶𑍍𑌰𑍀𑌰𑌿𑌤𑍍𑌯𑌭𑍇𑌦𑍇𑌨 𑌵𑌾
𑌯𑌦𑍍𑌵𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑌿𑌤𑍀𑌦𑍃𑌶𑍇𑌨 𑌵𑌚𑌸𑌾 𑌦𑍇𑌵𑌿! 𑌪𑍍𑌰𑌥𑌾𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 ॥ (7)

[ஐச்வர்யம் யதசேஷ பும்ஸி விதிதம் ஸௌந்தர்யலாவண்யயோ:
ரூபம் யச்சஹி மங்களம் கிமபியல் லோகே ஸதித்யுச்யதே।
தத்ஸர்வம் த்வததீநமேவ யதத: ஸ்ரீரித்யபேதேநவா
யத்வா ஸ்ரீமதிதீத்ருசேந வசஸா தேவி! ப்ரதாமச்நுதே ॥]

(அ-ம்) ஹேதேவி! அசேஷபும்ஸி—எல்லா சேதநர்களிடமும், யத்-யாதொரு, ஐச்வர்யம்—ஐச்வர்யமானது, விதிதம்—ப்ரஸித்தமாயிருக்கிறதோ. ஸௌந்தர்ய—அவயவங்களுடைய அழகு, லாவண்ய—சரீரத்தின் அழகு இவைகளின், யத்—எந்த, ரூபம்—ஸ்வரூபம், விதிதம்—ப்ரஸித்தமாயிருக்கிறதோ, லோகே—உலகில், யச்சஹி—எது, மங்களம்-மங்களமென்று, விதிதம்- ப்ரஸித்தமாயுள்ளதோ. யத்கிமபி-எந்தவஸ்து, ஸத்-நல்லது, இதி-என்று, லோகே-உலகில், உச்யதே-சொல்லப்படுகிறதோ, தத்ஸர்வம்-அவையெல்லாம், யத்-எந்த காரணத்தினுல், த்வததீநமேவ—உன்னதீநமாகவே, இருக்கிறதோ, அத:-இந்தகாரணத்தினுல், ஸ்ரீரிதி-'ஸ்ரீ:' என்று, அபேதேநவா—அபேதத்தினுலோ, யத்வா-அல்லது, ஸ்ரீமதிதீத்ருசேந வசஸா—'ஸ்ரீமத்' (ஸ்ரீயோடுகூடியது) என்கிறசொல்லாலோ, ப்ரதாம்- ப்ரஸித்தியை, அச்நுதே—அடைகிறது.

(க) உலகத்தில் ஐச்வர்யத்தையும், உயர்ந்த அழகையும், மங்களகரமான வஸ்துவையும், மற்றுமுள்ள நல்ல வஸ்துக்களையும், 'ஸ்ரீ:' என்கிற சப்தத்தினுலோ, 'ஸ்ரீமத்' என்கிற சப்தத்தினுலோ குறிப்பிடுகிறார்கள். இதற்குக் காரணமென்னவென்றால் முன்சொல்லப்பட்ட ஐச்வர்யம் முதலியவை உன்கடாக்ஷத்தினுல் ஏற்பட்டன என்பதுதான். * (7)

இப்படிப்பட்ட உன்னுடைய மஹிமை திவ்யதம்பதிகளான உங்களிருவராலுமளவிடமுடியாதென்கிறார்:—

𑌦𑍇𑌵𑌿 𑌤𑍍𑌵𑌨𑍍𑌮𑌹𑌿𑌮𑌾𑌵𑌧𑌿𑌰𑍍𑌨 𑌹𑌰𑌿𑌣𑌾 𑌨𑌾𑌪𑌿 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌜𑍍𑌞𑌾𑌯𑌤𑍇
𑌯𑌦𑍍𑌯𑌪𑍍𑌯𑍇𑌵𑌮𑌥𑌾𑌪𑌿 𑌨𑍈𑌵 𑌯𑍁𑌵𑌯𑍋𑌃 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌤𑌾 𑌹𑍀𑌯𑌤𑍇 ।
𑌯𑌨𑍍𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑍇𑌵 𑌤𑌦𑌜𑍍𑌞𑌤𑌾𑌮𑌨𑍁𑌗𑍁𑌣𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌤𑌾𑌯𑌾 𑌵𑌿𑌦𑍁𑌃
𑌵𑍍𑌯𑍋𑌮𑌾𑌮𑍍𑌭𑍋𑌜𑌮𑌿𑌦𑌨𑍍𑌤𑌯𑌾 𑌕𑌿𑌲 𑌵𑌿𑌦𑌨𑍍 𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍋(𑌅)𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ (8)

[தேவி த்வந்மஹிமாவதிர்நஹரிணா நாபி த்வயா ஜ்ஞாயதே
யத்யப்யேவமதாபி நைவ யுவயோஸ்ஸர்வஜ்ஞதா ஹீயதே।
யந்நாஸ்த்யேவ தத்ஜ்ஞதாமநுகுணாம் ஸர்வஜ்ஞதாயா விது:
வ்யோமாம்போஜமிதந்தயா கில விதந் ப்ராந்தோ(அ)யமித்யுச்யதே ॥]

(அ-ம்) ஹேதேவி! த்வந்மஹிமாவதி:—உன்னுடைய மஹிமையின்எல்லை, ஹரிணா—பகவானுலும், நஜ்ஞாயதே-அறியப்படுகிறதில்லை; த்வயாபி—உன்னுலும். நஜ்ஞாயதே—அறியப்படுகிறதில்லை; எவம்யத்யபி—இப்படித்தான். அதாபி-ஆனபோதிலும் யுவயோ:-உங்களுடைய, ஸர்வஜ்ஞதா—எல்லாவற்றையும் அறிந்திருக்கும்தன்மை, நஹீயதஏவ—குறைகிறதேயில்லை. யத்-எந்தவஸ்து, நாஸ்த்யேவ-அடியோடு இல்லையோ, தத்ஜ்ஞதாம்—அந்த வஸ்து

வின் அறிவின்மையை, ஸர்வஜ்ஞதாயா:—எல்லாமறிந்திருப்பதற்கு; அநுகுணம்—தகுந்ததாக, விது:—அறிகிறார்கள். வ்யோமாம்போஜம்—ஆகாசத்தாமரையை, இதந்தயா—இதுஎன்பதாக, விதந்—அறிகிறவன், அயம்– இவன், ப்ராந்த இதி—ப்ரமமுள்ளவனென்று, உச்யதேகில—உலகத்தில் சொல்லப்படுகிறானல்லவா?

(க) ஹேதேவி! உன்னுடைய மஹிமையின் எல்லையை ஸர்வஜ்ஞன் என்று ச்ருதிப்ரஸித்தனான பகவானாலும் உன்னாலும் அறியமுடியவில்லை. இப்படி என்மஹிமையின் எல்லையை அறியமுடியாமலிருந்தால் எங்களுடைய ஸர்வஜ்ஞதைக்கு குறைவு ஏற்படாதோவென்றால், குறைவு ஒன்றுமில்லை. இல்லாத வஸ்துவை இல்லை என்று அறிவது ஸர்வஜ்ஞனாயிருப்பதற்கு விருத்தமன்று. இல்லாததை இல்லையென்று அறிவதுதானே ஸரியாகத் தெரிந்து கொள்வதாக ஆகும். ஆகாசத்தாமரை என்கிற வஸ்துவே கிடையாதாகையால் அதை அறிந்தேனென்று சொல்லுகிறவன் ப்ரமைகொண்டவனென்று உலகத்தில் சொல்லப்படுகிறானல்லவா? உன் மஹிமைக்கோ எல்லையேயில்லை. ஆகையாலதனறியாமை உங்களுடைய ஸர்வஜ்ஞதைக்கு ஏற்றதுதான். * * * * (8)

வாகீச்வரியான ஸரஸ்வதிக்கும் மேற்பட்டவளான லக்ஷ்மியை சரணமடைகிறார்:—

𑌲𑍋𑌕𑍇 𑌵𑌨𑌸𑍍𑌪𑌤𑌿𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌤𑌾𑌰𑌤𑌮𑍍𑌯𑌂
𑌯𑌸𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌮𑍁𑌦𑌾𑌹𑌰𑌨𑍍𑌤𑌿 ।
𑌸𑌾 𑌭𑌾𑌰𑌤𑍀 𑌭𑌗𑌵𑌤𑍀 𑌤𑍁 𑌯𑌦𑍀𑌯𑌦𑌾𑌸𑍀
𑌤𑌾𑌂 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑌮𑌹𑌿𑌷𑍀𑌂 𑌶𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃 ॥ (9)

[லோகே வநஸ்பதிப்ருஹஸ்பதி தாரதம்யம்
யஸ்யா: ப்ரஸாதபரிணாமமுதாஹரந்தி ।
ஸா பாரதீ பகவதீ து யதீயதாஸீ
தாம் தேவதேவமஹிஷீம் ச்ரியமாச்ரயாம: ॥]

(அ–ம்) லோகே – உலகத்தில், வநஸ்பதி –(ஜ்ஞாநமில்லாதவஸ்துவில் உயர்ந்த) வ்ருக்ஷத்துக்கும், ப்ருஹஸ்பதி –(ஜ்ஞாநத்தில்உயர்ந்த) ப்ருஹஸ்பதிக்கும், தாரதம்யம் – வாசியானது, யஸ்யா: – எந்த லக்ஷ்மியினுடைய, ப்ரஸாதபரிணாமம் – அநுக்ரஹத்தின் பரிபாகமாக, உதாஹரந்தி சொல்லுகிறார்களோ, பகவதீ – பூஜிக்கத்தகுந்தவளான, ஸா – அப்பேர்ப்பட்ட, பாரதீ – ஸரஸ்வதியும், யதீயதாஸீ – எவளுடைய வேலைக்காரியோ, தாம் – அப்படிப்பட்ட, தேவதேவமஹிஷீம் – தேவாதிபனான எம்பெருமானுடைய திவ்யமஹிஷியான. ச்ரியம் – லக்ஷ்மியை, ஆச்ரயாம: – சரணமடைகிறோம்.

(க) உலத்தில் மரம் ஜ்ஞாநமில்லாதபடியால் அதை மிகவும் நிக்ருஷ்டமாகவும், ப்ருஹஸ்பதி அதிக ஜ்ஞாநவானானபடியால் அவரை உத்க்ருஷ்டராயும் சொல்லுகிறார்கள், அதற்குக் காரணம் உன்னுடைய அநுக்ரஹம் ப்ருஹஸ்பதியினிடம் அதிகமாயும் வ்ருக்ஷத்தினிடம் குறைவாயுமிருப்பதுதான். அதிகமாகச் சொல்லி என்ன? ஜ்ஞாநத்தையும் வாக்கையும் கொடுக்கிறவளாய் ப்ரஸித்திபெற்ற ஸரஸ்வதியும் உனக்கு அடிமைதான். இப்படி ஸர்வோத்க்ருஷ்டையான ஸ்ரீமந்நாராயணன் மஹிஷியான உன்னை சரணமடைகிறோம். * * * (9)

ப்ரபஞ்சத்தின் ஸ்ருஷ்டியும் உன் கடாக்ஷாதீநமென்கிறார்.—

𑌯𑌸𑍍𑌯𑌾𑌃 𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑌮𑍃𑌦𑍁𑌵𑍀𑌕𑍍𑌷𑌣𑌦𑍀𑌕𑍍𑌷𑌣𑍇𑌨
𑌸𑌦𑍍𑌯𑌃 𑌸𑌮𑍁𑌲𑍍𑌲𑌸𑌿𑌤𑌪𑌲𑍍𑌲𑌵𑌮𑍁𑌲𑍍𑌲𑌲𑌾𑌸 ।
𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌯𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍
𑌤𑌾𑌂 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑌮𑌹𑌿𑌷𑍀𑌂 𑌶𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃 ॥ (10)

[யஸ்யா: கடாக்ஷம்ருதுவீக்ஷண தீக்ஷணேந ஸத்யஸ்ஸமுல்லஸிதபல்லவமுல்லலாஸ ।
விச்வம் விபர்யயஸமுத்தவிபர்யயம் ப்ராக் தாம் தேவதேவமஹிஷீம் ச்ரியமாச்ரயாம: ॥]

(அ—ம்) ப்ராக் — ப்ரளயகாலத்தில், விபர்யய — கடாக்ஷமில்லாமையினல், ஸமுத்த — உண்டான, விபர்யயம் — இல்லாமையையுடைத்தான, விச்வம் — ப்ரபஞ்சமானது, யஸ்யா: — எந்த லக்ஷ்மியின், கடாக்ஷம்ருதுவீக்ஷண — கடாக்ஷமாகிற ம்ருதுவான பார்வையின், தீக்ஷணேந — ஸங்கல்பத்தினுல், ஸத்ய:—உடனே, ஸமுல்லஸித—விகாஸத்தை அடைந்த, பல்லவம்—தளிரை உடையதாக, உல்லலாஸ — ஆவிர்ப்பவித்ததோ. தாம் — அப்படிப்பட்ட, தேவதேவமஹிஷீம் — தேவாதிபமஹிஷியான, ச்ரியம் — லக்ஷ்மியை, ஆச்ரயாம: — சரணமடைகிறோம்.

(க) ஸ்ருஷ்டிக்குமுன்பு ப்ரளயகாலத்தில் உன் கடாக்ஷமில்லாமையினல் இல்லாததுபோன்ற நிலையை அடைந்த இந்த உலகம், நீ கடாக்ஷிக்க வேணுமென்று ஸங்கல்பித்தஉடனே பசுமையுடன் ஆவிர்ப்பவித்தது. * * * * (10)

இப்படிப்பட்ட லக்ஷ்மியின் கடாக்ஷத்தை தனக்குப் ப்ரார்த்தித்து க்ரந்தத்தைத் தலைகட்டுகிறார்:—

யஸ்யா: கடாக்ஷவீக்ஷாக்ஷணலக்ஷம் லக்ஷிதா மஹேசா: ஸ்யு: ।
ஸ்ரீரங்கராஜமஹிஷீ ஸா மாமபி வீக்ஷதாம் லக்ஷ்மீ: ॥ (11)

[யஸ்யா: கடாக்ஷவீக்ஷாக்ஷணலக்ஷம் லக்ஷிதா மஹேசா: ஸ்யு: ।
ஸ்ரீரங்கராஜமஹிஷீ ஸா மாமபி வீக்ஷதாம் லக்ஷ்மீ: ॥]

(அ—ம்) யஸ்யா: — எந்த மஹாலக்ஷ்மியினுடைய, கடாக்ஷவீக்ஷா — கடைக்கண்பார்வைக்கு, க்ஷணலக்ஷம் லக்ஷிதா: — க்ஷணகாலம் லக்ஷ்யமாக ஆனவர்கள், மஹேசா: — அதிக ஐச்வர்யமுள்ளவர்களாக ஆகிறார்களோ, ஸா — அப்படிப்பட்ட, ஸ்ரீரங்கராஜமஹிஷீ— ஸ்ரீரங்கநாதனுடைய திவ்யமஹிஷியான, லக்ஷ்மீ: — லக்ஷ்மீ, மாமபி — என்னையும், வீக்ஷதாம் — கடாக்ஷிக்கவேணும்.

(க) லக்ஷ்மீகடாக்ஷத்திற்கு க்ஷணமாத்ரம் பாத்ரமானவர்களும் உயர்ந்த ஐச்வர்யமுள்ளவர்களாக ஆகிவிடுகிறார்கள். ஆகையினல் அப்படிப்பட்ட ஸ்ரீரங்கநாததிவ்யமஹிஷியான லக்ஷ்மி என்னையும் குளிரக்கடாக்ஷித்தருளவேணும். * * * (11)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

இராமாநுஜாவதாரம்

(ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி ஐயங்கார், அட்வோகேட், சென்னை.)

'எப்பொருள் யார் வாய் கேட்பினுமப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்பது ஒரு திருக்குறள். சொல்லுவோரது இயல்பை நோக்காமல் சொல்லப்பட்ட பொருளின் உண்மையான தன்மையை ஆராய்ந்து பார்த்து அது நல்லதாயின் அதைக்கைக்கொள்ளுதலும் தீயதாயின் அதை விடுப்பதுமே அறிவு என்பது இதன் பொருள். இது பொதுவானதொரு உபதேசமொழி. அரசியல் துறைகளில் மட்டுமின்றி ஆத்மவிசாரவிஷயத்திலுங்கூட இவ்வாக்கு நம் பூர்வாசார்யர்களால் கைக்கொள்ளப்பட்டிருக்கிறது. தெய்வமே உலகைத் திருத்தி உய்யக்கொள்ள ஒரு ஆசார்ய வடிவத்தில் தோன்றி பல்பொருள்களைப் பகர்ந்தபோது அப்பொருள்களில் ஆராயவேண்டுமென்பது சிறிதும் இருக்கக்காரணமில்லையென்று நமக்குத் தோன்றும். ஆனல் துணிவுடைய செந்நாப் புலவர்களாகிய நம் ஆசார்யர்கள் அப்பொருள்களையும் சீர்தூக்கிப் பார்த்து அவைகளுள் எவை வேதங்களுக்கும் வைதிகஸித்தாந்தத்திற்கும் அநுகுணமாக இருப்பனவோ அவைகளைமட்டும் அங்கீகரித்துப் பிறபொருட்

களை உல்லங்கனம் செய்ததைக் காண்கிறோம். 'உனக்கேலும் பிழை பிழையே' என்று நம்மாழ்வார் பெருமாளைப் பார்த்து பேசிய கணக்கில், பாஷ்யகாரர், பட்டர், தேசிகன் ஆகிய ஆசார்ய ச்ரேஷ்டர்கள் 'பெருமாள் சொல்லி வைத்தது' என்பதற்காக ஒருபொருளை மதியாமல் அது ப்ரமாண ஸம்மதமா என்று ஆராய்ந்து பார்த்து, அப்படியிருந்தால் மட்டுமே அதை ஒப்புக்கொள்ளுகிறார்கள். கபிலராகித் தோன்றி ஸாங்க்யமதத்தை ஏற்படுத்தியவரும் புத்தராகத்தோன்றி பௌத்தமதத்தை ஸ்தாபித்தவரும் எம்பெருமான்தான் என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. கபிலாவதாரம் என்றும், பௌத்தாவதாரம் என்றும் அவ்வவதாரங்கள் கொண்டாடப்படுகின்றனவேயன்றி அவ்வவதாரங்களில் நிறுவிய ஸாங்க்ய பௌத்த மதங்கள் கண்டனத்துக்கே விஷயமாகியுள்ளன. மோஹந சாஸ்த்ரங்களென்றும், மாயாசாஸ்த்ரங்களென்றும் பேசப்பட்டு நிராகரிக்கப்படுகின்றன அம்மதங்கள். ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் பட்டர் '**இதி மோஹநவர்த்மநா த்வயா க்ரதிதம் பாஹ்யமதம் த்ருணய மந்யே**' (உத்தரசதகம்-16) என்று பேசுமிடத்து அம்மதங்களை த்ருணீகரிக்கக் காண்கிறோம். ஸ்ரீதேசிகன் தயாசதகத்தில் 47-ம் ச்லோகத்தில் அவைகளை மாயாசாஸ்த்ரங்களெனவும், தயாஸம்பந்தமன்றி லீலார்த்தம் ப்ரகடநம் பண்ணப்பட்டவைகளென்றும் பேசுகிறார். ஸ்ரீபாஷ்யகாரர் அம்மதங்களைத் தமது பாஷ்யாதி க்ரந்தங்களில் நிராகரித்தமையைக் கொண்டு வெகு அழகாக ஸ்வாமி தேசிகன யதிராஜஸப்ததி ச்லோகமொன்றில் ஒரு உல்லேகம் செய்தருளுகிறார்:—

'நாநாபூதைர் ஜகதி ஸமயை: நர்மலீலாம் விதித்ஸோ:, அந்த்யம் வர்ணம் ப்ரதயதி விபோ: ஆதிமவ்யூஹ பேதே । விச்வம் த்ராதும் விஷயநியதம் வ்யஞ்ஜிதாநுக்ரஹஸ்ஸந், விஷ்வக்ஸேநோ யதிபதிரபூத் வேத்ரஸாரஸ்த்ரிதண்ட: ॥ (32)

[அநேகப்ரகாரங்களான ஸித்தாந்தங்களை விளையாட்டாகச் செய்ய விரும்பிய ஸர்வேச்வரன் யுகத்திற்கு அநுகுணமாகக் கறுப்பு (கடைசி) வர்ணத்தை அடைந்தபோது (அதாவது கலிகாலத்தில்) விஷயஸங்கங்களில் ஈடுபட்டிருக்கும் சேதநர்களைக் காப்பதற்காக அநுக்ரஹமே வடிவாக விஷ்வக்ஸேநர் (ஸேநாபதி) யதிபதியர்க ஆனார். அவரது செங்கோல் த்ரிதண்டமாகியது] பெருமாளே உடையவராக அவதரித்தாரென்றும், அவரது பஞ்சாயுதங்கள் அப்படி அவதாரம் செய்தனவென்றும், ஆதிசேஷன்தான் இவ்வடிவில் அவதரித்தாரென்றும் பல கொள்கைகள் நிற்க இங்கே ஸ்ரீதேசிகன் நூதனமான ஒரு ஐதிஹ்யம் காட்டியருளுகிறார். ஸ்ரீபாஷ்யகாரர் ஸத்ஸித்தாந்தத்தை ஸ்தாபித்தருளினர் என்பதை எடுத்துக்காட்டுகிறது இந்த வர்ணனை.

அரசன் லீலாரஸமேலீட்டினால் ஒருக்கால் தன் நிலையை மறந்து சில தவறான கார்யங்களைச் செய்தால் அவற்றால் ப்ரஜைகளுக்கு யாதொரு தீங்கும் நேரிடாவண்ணம் அவர்களைத் தக்கபடி எச்சரித்துப் பாதுகாப்பது ஸங்பந்த்ரியின் கடமையல்லவோ! அதுபோல பெருமாள் தமது ஸ்வாச்சந்த்யத்தாலே (மனம்போன போக்காகச் செய்டக்கூடிய தன்மையாலே) சில அபஸித்தாந்தங்களைச் செய்துவைத்தபோது அவைகளாலே சேதநர்களுக்குத் துன்பம் விளையாவண்ணம் காப்பது மந்த்ரிஸ்தாநத்தை வஹிக்கும் விஷ்வக்ஸேநரது பொறுப்பாயிற்று. ஏனெனில், சிக்ஷை யென்பது வடிவெடுத்ததுபோலவன்றோ அவரிருப்பது! '**சிக்ஷா ஸ்ரோத இவோத்திதம்**' என்று தேசிகன் இதைப் பாராட்டுகிறார் தயாசதகத்தில். பெருமாளுடைய கருணாஸாகரத்திலிருந்து சிக்ஷை அல்லது திருத்திப் பணிகொள்ளும் தத்வம் விஷ்வக்ஸேநராக வடிவெடுத்து ஒரு பெருக்காறாக ப்ரஸரிக்கிறது என்று அங்கு திருவுள்ளம். அவர் அவ்வபஸித்தாந்தங்கள் தோன்றியபோது தோன்றாது பலகாலங்களுக்குப்பின்னர் ஸ்ரீபாஷ்யகாரராக அவதரித்தார் என்று சொல்லப்பட்டிருப்பது எக்காரணம் பற்றியென்பதைக் காட்ட '**விஷயநியதம் விச்வம் த்ராதும்**' என்ற சொற்றொடர் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. பெருமாள் நிலைதவறி கறு

ப்பு (கடைசி) வர்ணத்தை யடைந்தபோது உலகமும் விஷயபோகங்களிலே மண்டிக்கிடந்து தத்வத்தைப் பராமர்சிக்கும் சக்தியை யிழந்து நின்ற கலிகாலம். ஆக இப்பொழுதுதான் இந்த அவதாரத்திற்கு ஸமயம் வாய்த்தது. இதுவரை அந்த அபஸித்தாந்தங்களை அநுஸரிப்போர் ஒருவருமில்லாமல் அனைவரும் விவேகிகளாயிருந்தனர் என்று கொள்ளத்தக்கது. அந்த ஸித்தாந்தங்களுக்கு ஆதரவு அளிக்காதிருக்கவேண்டுமென்று எச்சரித்து உலகைத் திருத்திப்பணிகொள்ள உடையவர் வடிவில் அவதரித்தருளினார் விஷ்வக்ஸேநர் என்பது தேசிகன் செய்யும் அழகிய ஒரு உல்லேகம். 'நின்மாட்டாய மலர்புரையும் திருவுருவம் மனம் வைக்கமாட்டாத பலசமய மதி கொடுத்தாய்' என்று பெருமாளிடம் கசந்து பேசுகிறார் நம்மாழ்வார். அதிலும் மேம்பட்டதான உலகைத் திருத்தித் திருமகள் கேள்வனுக்காக்கிய பெருமை ஸ்ரீபாஷ்யகாரரதே. இதில்தான் அநுக்ரஹம் வ்யஞ்ஜிதமாகியது. இல்லையேல் உலகம் வஞ்சிக்கப்பட்டே போயிருக்கும்.

விஷ்வக்ஸேநருடைய அதிகாரத்திற்கறிகுறி அவர் கையிலுள்ள வேத்ரம் (பிரம்பு). அந்தப் பிரம்பின் நுனியின் அசைவிலே அகில விச்வத்தின் வ்யவஸ்தைகளும் தங்கிக் கிடக்கின்றன. அவருடைய சிக்ஷையாகிற உத்யோகத்திற்கு அதுவே செங்கோல் போன்றது. விஷ்வக்ஸேநருக்குச் சேதநர்களிடம் ஆதரம் தோன்றவும் அவருடைய செங்கோலுக்கும் அவ்வாதரம் முழுமடங்காசப் பொலிந்து அது ஒரு த்ரிதண்டமாக ஸ்ரீபாஷ்யகாரர் திருக்கையிலே விளங்கத் துவக்கியது. 'வேத்ரத்துடன் விஷ்வக்ஸேநர் யதிபதியாக ஆனார்' என்று பாடாமல் 'விஷ்வக்ஸேநர் யதிபதியாக அவதரிக்கவும், வேத்ரமானது த்ரிதண்டமாகத் தோன்றியது' என்று பாடப்பட்டபடியால் இரண்டு அவதாரங்கள் தனித்தனி ஏற்பட்டன வென்று கொள்ளவேண்டும். இதில் ஒரு ரஸம் த்வநிக்கிறது. செங்கோல் பிடித்த கையால் செய்ய வொண்ணாத கார்யங்கள் கூட முக்கோல் பிடித்த கையால் செய்ய முடிந்தது என்ற அரிய விஷயம் இதனால் காட்டப்படுகிறது. விச்வத்தின் வ்யவஸ்தைகளைச் செய்யவல்ல விஷ்வக்ஸேநருக்குக்கூட த்ரிதண்டமும் திருக்கையுமாக இருக்கவல்ல ஒரு பரமஹம்ஸரான பிறகே உயர்ந்த அநுக்ரஹம் உலகத்திலே வ்யஞ்ஜிதமாயிற்று என்று ஸூசிதமாகிறது. இதை எண்ணித்தான் போலும் '**த்ரிஜகத்புண்ய பலம் த்ரிதண்டஹஸ்தம்**' என்று பாஷ்யகாரர் பெருமைக்கு த்ரிதண்டமும் ஒரு முக்ய காரணமாகப் பாராட்டப்பட்டிருக்கிறது.

இந்த அளவிலே 'மெய்ப்பொருள் காண்பதறிவு' என்பதை மெய்ப்பித்திருக்கிறார்கள் நம் முன்னோர்கள்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமியின் ஷஷ்ட்யப்தபூர்த்தி மஹோத்ஸவம்

'கலிமஹ்ய ஸஹ்ய மநவாஹ ஸமுத்யஸ:
யதிந் க்ருவதி வ்ரவவவதநழ் ।
ஹரிஹஸ்தவாஸ்யரவிகா: ஸமஸ்ரம
க்ருயவி க்ருயாஹ வயமா ஸதிஷதே ॥'

நாளது பங்குனி மீ 14, உ (27-3-51) மங்களவாரமும் விசாக நக்ஷத்ரமும் கூடிய வன்று காஞ்சீபுரம் ஸ்ரீ. உப, ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியினுடைய ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவம் வெகு விமர்சையாக நடந்தேறியது. அதையொட்டி காஞ்சி மாநகரில் முந்திய பத்து தினங்களும் சென்னை மாநகரில் பிந்தின ஐந்து தினங்களும் ஒரு பெரிய ஸ்ரீவைஷ்ணவ விழாவாகக் கொண்டாடப்பட்டன, உலகத்தில் அநேகர்களுக்கு ஷஷ்ட்யப்தபூர்த்தி கொண்டாடப்பட்டு வருவ

தைக் கண்டிருக்கிறோம்; இனியும் காண்போம்;
ஆயினும் இந்த ஸ்வாமியினுடைய ஷஷ்ட்யப்த
பூர்த்தி மஹோத்ஸவத்திற்கு ஸமானமாக வே
றொருவருக்கும் நடந்தது கிடையாது; இனி
யும் நடக்காதென்று உறுதியாகச் சொல்லலாம்.
ஏனெனில் இப்பொழுது நிகழ்ந்த உத்ஸவம்
அந்தஸ்வாமியைக் குறித்து இருப்பினும்
உண்மையில் அது ஸ்ரீவைஷ்ணவநாடு ஒருங்
கே திரண்டு அநுபவித்த பெரியதோர் திரு
விழாவெனச் சொல்லவேண்டும். ஸ்ரீவைஷ்ணவ
ஸம்ப்ரதாயத்திற்கு இந்தஸ்வாமி செய்ததும்
செய்துவருவதுமான அரும்பெருந் தொண்டு
களைக்கண்டு உகந்த ஸ்ரீவைஷ்ணவ உலகம்
அந்த ஸ்வாமிக்கு ஹார்த்தமாக நடத்திவைத்த
ஒரு மஹோத்ஸவமிது என்பதுதான் தத்வம்.
ஸ்வாமி அந்த உத்ஸவத்தைத் தமது அந்த
ரங்கர்களைக்கொண்டும் அபிமானிகளைக்கொண்டும்
இந்தப் பதினைந்து தினங்களிலும் நடத்திய
நிகழ்சிக்குறிப்புகளை விவரிக்க இங்கே இடம்
காணாது. வேதங்களும் அருளிச்செயல்களும்
ரஹஸ்யக்ரந்தங்களும் அந்த பத்துதிநங்களும்
கழிந்தபிறகுங்கூட காஞ்சிமாநகரில் இன்ன
மும் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. அவ்வ
ளவு அழகான கோஷ்டி பாராயணங்களும்
ஸேவாகாலங்களும் சிற்றஞ்சிறுகாலையில் தொ
டங்கி இரவு நெடுநேரம்வரையில் நடந்தேறி
வந்தன.

எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பு
நம்மாழ்வார், ‘பொலிக பொலிக பொலிக’
வென்றும், ‘கண்டோம் கண்டோம் கண்டோம்’
என்றும் ஒருமுறைக்கு மும்முறையாக ஆர
வாரித்துச்செய்த மங்களாசாஸநம் இப்பொழு
துதான் பலித்ததென்று எண்ண இடமுண்
டாகிபது. பலவாண்டுகளாக தென்கலை வடகலை
கக்ஷிவ்யவஹாரங்களுக்குப் பெயர்பெற்ற காஞ்
சிமாநகரில் தென்கலையென்றும் வடகலையென்
றும் வித்யாஸம் சிறிதுமின்றி ஸ்ரீவைஷ்ணவ
ச்ரேஷ்டர்களனைவரும் ஒன்றுகூடி ஸ்வாமிதிரு
மாளிகையிலும் வெளியே திருவீதிகளிலும்
கோஷ்டிகளிலும் வித்யாஸமின்றி அன்வயித்
தார்களென்றால் சிலர் முதலில் இதை நம்ப
மறுக்கலாம். நேரில்கண்டநுபவித்தவர்களுக்
கே தெரியும் அதன் பெருமை. இதிலிருந்து
‘ஹரிஹரதஹாஸ்ய ரஸிகா: பரஸ்பரம்
க்ஷயவிக்ஷயாஹவஜுஷாம் ஸமிந்ததே’ என்று
தேசிகன் அன்று ஆசாஸித்தது இன்று பலி
த்தது என்று எண்ண இடமிருக்கிறது. அரு
ளாளன் இன்னருளால் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ர
தாடத்திற்கு இது ஒரு சுபஸூசனை. கலா
பேதங்களால் ஏற்பட்ட சச்சரவுகளெல்லாம்
ஒழிந்து ஒருமிக்க ஸ்ரீவைஷ்ணவர்களனைவரும்
ஒத்து வாழவேண்டுமென்றால் அது இந்த
மஹோத்ஸவத்தை இந்த அழகியமுறையிலே
நடத்த ஏற்பாடுசெய்த ஸ்ரீமான் அண்ணங்க
ராசார்யஸ்வாமி ஒருவர் தான் செய்யக்கூடிய
கார்யம். அவருடைய ஹார்தமான அபிப்ரா
யமும் ஐகரஸ்யத்திலே அவருக்குள்ள நோக்
கும், இம்மஹோத்ஸவவாயிலாக உலகோர்கள்
அறியவும் இனி அவரை ஒருசார்பார்கள் மட்
டும் தம்மைச் சேர்ந்தவர் என்று கொண்டா
டாது அசேஷஸ்ரீவைஷ்ணவர்களும் நம் தர்ச
னத்தை அரும்பாடுபட்டு அபிவ்ருத்தி செய்து
வரும் உன்னதபுருஷர் இவர் என்று கொண்
டாடவும் ப்ராப்தம். ஸ்வாமியும் ப்ரதிவாதி
பயங்கரம் என்று தமக்கு ஜந்மப்ராப்தமாயுள்
ள பிருதத்தில் தவிர பயங்கராம்சம் சிறிதும்
இல்லாதவராய் அசேஷ ஸ்ரீவைஷ்ணவர்களுக்
கும் அபயங்கரராய் நெடுநாள் அரோகத்ருட
காத்ரராக வாழ்ந்துவர வேண்டுமென்றும் இ
தோப்யதிகமாக உபந்யாஸங்களையும், க்ரந்தநிர்
மாணங்களையும் செய்துகொண்டு அனைவரையும்
ரஞ்ஜிப்பிக்க வேண்டுமென்றும், அஸூயாதிக
ளால் சிதறிக்கிடக்கும் ஸ்ரீவைஷ்ணவஸமூஹத்
தவர்களை ஒன்றுசேர்த்து உய்விக்கவேண்டுமெ
ன்றும் ஸர்வசரண்யன் திருவடிகளிலே ஸவிந
யம் ப்ரார்த்திக்கிறோம். ஓர் நிருபர்.

*   *   *   *

ஸ்ரீஅஹோபிலமடத்தில் மும்மணிக்கோவை மஹோத்ஸவம்

சென்ற பங்குனிமாஸம் ஸ்ரீ தேசிகன் திரு
நாளாகிய ச்ரவணத் திருநாளில் திருவெவ்வுளூ
ரில் ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஸ்ரீமும்மணிக்
கோவை யரங்கேற்றுப்படி மஹோத்ஸவம் சிற
ப்பாக நடைபெற்றது.

ஸ்ரீ சேட்லூர் நரஸிம்ஹாசாரிய ஸ்வாமியி
ன் வியாக்யானங்களோடு கூடிய ஸ்ரீ தேசிக

திவ்யஸூக்திகளை ஸ்ரீ சேட்லூர் ஸ்வாமியின் அநுஜராகிய ஸ்ரீநிவாஸ மூர்த்திஸ்வாமி ஒவ்வொன்றாக மறு பதிப்பாக அச்சிட்டு வெளியிட்டுவருகிறார். அதில் செந்தமிழ் மும்மணிக் கோவை என்னும் தேசிகப் பிரபந்தம் இரண்டாவது மலராக வெளிவந்துள்ளது. இந்த மலரை ஸ்ரீ ஸ்ரீநிவாஸமூர்த்தி ஸ்வாமி நமது தேசிக தர்சனத்தைப் பலவிதங்களாலும் தழைக்கச்செய்துவரும் நம் ஸ்ரீ அழகியசிங்கர்களுடைய ஸந்நிதியில் ஸமர்ப்பணமாகச்செய்துள்ளார்.

புஸ்தகம் அச்சாகியவுடன் முதன்முதலாக அதை ஸ்ரீ அழகியசிங்கர்கள் ஸந்நிதியில் ஸமர்ப்பித்து, அவர்களுடைய அனுக்ரஹத்தை முன்னிட்டே அதை வெளியில் ப்ரசாரம் செய்ய வேண்டும் என்று முன்கூட்டியே அந்த ஸ்வாமி தீர்மானித்திருந்தார். அவ்வாறே முன்கூட்டியே ஸ்ரீ அழகியசிங்கர்கள் ஸந்நிதியிலும் விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. எனவே காலையில் இரண்டு ஸ்ரீ அழகியசிங்கர்களும் அன்றைய காலக்ஷேபப்ரவசனம் முடிந்ததும் ஒருசேர்த்தியில் எழுந்தருளி யிருக்கும்போது அவர்களுடைய ஸந்நிதியில் மும்மணிக்கோவையின் ஸமர்ப்பணத்தை விண்ணப்பித்து விட்டுப் புஸ்தகத்தையும் ஸ்ரீஸந்நிதியில் ஸமர்ப்பித்தார்.

பிறகு ஸ்ரீஸந்நிதியில் தாம் ஸமர்ப்பிப்பதற்காகக் கொண்டுவந்திருந்த மும்மணிக்கோவை முப்பது புஸ்தகங்களையும், திருவஹீந்திரபுரம் ஸ்ரீதேசிகனை அழகிய மூவர்ணத்தில் சித்தரித்த படங்களில் முப்பது ப்ரதிகளும், ஸ்ரீதேசிகனுடைய பரமபதஸோபானம் 15–ப்ரதிகளும் இன்னும் சில ஸம்ப்ரதாயப்புத்தகங்களுமாக ஸுமார் நூறு ரூபாய் விலையுள்ள புஸ்தகங்களை ஸமர்ப்பித்தார். அவைகளை ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளமுகந்து அங்கீகரித்தருளியாயிற்று.

இவ்வாறு ஸமர்ப்பிக்கப்பட்ட புஸ்தகங்களில் மும்மணிக்கோவையையும் பரமபதஸோபானத்தையும் அங்கிருந்த ஸ்ரீஸந்நிதி ஆராதகஸ்வாமிகளுக்கும் காலக்ஷேபபர ஸ்வாமிகளுக்கும் விநியோகிக்கும்படி ஸ்ரீ அழகியசிங்கர் நியமித்தருளியாயிற்று. மற்ற புஸ்தகங்கள் ஸ்ரீஸந்நிதி புஸ்தகசாலையில் சேர்க்கப்பட்டது.

புஸ்தகங்கள் ஸமர்ப்பிக்கப் பட்டவுடன் அப்புத்தகங்களில் முன்னுரையிலும் மற்ற அம்சங்களிலும் சிறிது சிறிது பாகங்கள் ஸ்ரீ ஸந்நிதியில் வாசித்து உபந்யஸிக்கப்பட்டன. அவைகளை ஸ்ரீ அழகிய சிங்கர் மிகவும் திருவுள்ளம்பற்றி மகிழ்ந்தமை மந்தஹாஸத்துடன் அருளிய திருவாக்குகளால் வெளியாயிற்று.

ஸ்ரீநிவாஸமூர்த்தி பிறகு ஸ்ரீ அழகியசிங்கர் விஷயமாகத்தாம் செய்திருந்த ச்லோகங்கள் சிலவற்றை வாசித்து உபந்யஸித்தார். இவ்வாறு ச்லோகங்களை உபந்யஸிக்கும்போது அவர் நைச்யானுஸந்தானத்தோடு ஸ்ரீ அழகியசிங்கருடைய பிரபாவங்களையெல்லாம் எடுத்துக் கூறினார். இவற்றை ஸ்ரீ அழகிய சிங்கர் திருச்செவிசாற்றி அருகில் நின்று கொண்டிருந்த அடியோங்களெல்லாம் ரஸிக்கும்வண்ணம் சாடுவாக அவ்வப்போது சில வார்த்தைகள் அருளிச் செய்தருளியாயிற்று. அதனால் பூர்வாச்ரமத்தில் ஸ்ரீ அழகியசிங்கருக்கும் ஸ்ரீ சேட்லூர் நரஸிம்ஹாசார்யஸ்வாமிக்கும் இருந்த ஸௌஹார்த்தம் வெளியாயிற்று.

பிறகு ஸ்ரீநிவாஸமூர்த்தி தாம் அச்சிட்டு வரும் ஸ்ரீதேசிகதிவ்யஸூக்திகளை வெளியிடுவதற்கு ஆஸ்திகர்களுடைய உதவியை நாடி எழுதியிருந்த விண்ணப்பத்தை வாசித்து ஸ்ரீ அழகியசிங்கர் அதை திருவுள்ளம்பற்றி யனுக்ரஹிக்குமாறு ப்ரார்த்தித்தார்.

அதில் ஸ்ரீதேசிகன் தமது திவ்யஸூக்திகளை அனுக்ரஹித்தருளியது நம்முடைய ஸ்வரூபத்தை நமக்கு உணர்த்தி நம்மை வாழ்விப்பதற்காகவேயாகுமென்றும்: அவை இங்கே அனுஸந்திக்கும் நமக்கு பரமபதத்தில் நாம் அடையக்கூடிய பேரின்பத்தை இங்கேயே நமக்குக்கொடுக்கின்றனவென்றும், அவைகளையனுஸந்திப்பது நமது கடமையென்றும் இந்த ஸூக்திகளின் ரஸங்களை அனுபவிக்க உபசரிக்கும் ஸ்ரீசேட்லூர் ஸ்வாமியின் வ்யாக்யான நூல்களை அச்சிட்டு வெளியிட அனைவரும் உதவவேண்டுமென்றும், ஸ்ரீ அழகியசிங்கர்களுடைய பரமக்ருபையால் இக் கைங்கர்யம் நடந்தேறும்படி அனுக்ரஹிக்கவேணுமென்றும் கேட்டுக்கொண்டார். அவ்வார்த்தைகளை ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளம்பற்றி அனுக்ரஹித்தாயிற்று.

ஸ்ரீவைஷ்ணவ தாஸன்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸம்பாதகரின் குறிப்புகள்

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚
𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌞𑍍𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃
𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।

𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣
𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇
𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

நம் தேசத்தில் முன்காலத்தில் நமது ப்ராசீன கலாசாரம், பண்பாடு, இலக்கியம் இவைகள் தழைத்தோங்கி வளர்ந்துவந்ததற்கு இந்நாட்டை ஆண்டுவந்த பற்பல அரசர்களின் பேராதரவு ஒரு முக்யகாரணமாயிருந்து வந்தது. வைதிகஸித்தாந்தத்தையும் ஸம்ப்ரதாயத்தையும் நன்கு விளக்கிய பல ஆசார்யச்ரேஷ்டர்கள் அந்தந்த தேசத்தரசர்களால் நன்கு பஹுமானிக்கப்பட்டு அவ்வோ க்ரந்த மதங்களைப் பரவச்செய்து ஸம்ரக்ஷணம் வந்தனர். அந்தந்த சாஸ்த்ரங்களில் தேர்ச்சி பெற்றவர்கள் சிறந்த க்ரந்தங்களை எழுதினர். அப்படி எழுதப்பட்ட க்ரந்தங்கள் நன்றாகப் ப்ரசாரம் செய்யப்பெற்றுவந்தன. ப்ராசீன ஸம்ப்ரதாயமும் ஆசாரமும் சீரிய முறையில் ஸம்ரக்ஷிக்கப்பட்டு வந்தது. இப்போதோவெனில் நிலைமை அடியோடு மாறிவிட்டது. அரசாங்கத்திலிருந்து நமது புராதனகலாசாரம், பண்பாடு முதலியவைகளுக்கு எவ்விதமான உதவியையும் எதிர்பார்ப்பதில் பயனில்லை யென்பது தெளிவாகிவிட்டது. நமது ஸநாதன தர்மத்தை நாம் பின்பற்றிநடப்பதையும் அந்த தர்மத்தை நம்மவர்களும் பின்பற்றிநடக்க நாம் மேற்கொள்ளும் கார்யங்களையும் அரசாங்கத்தாரும் அரசாங்கத்தாரின் சலுகைபெற்றவர்களும் தடைசெய்யாமலிருந்தாலே போதும் என்ற ஸ்திதி ஏற்பட்டுவருகிறது. இது மிகவும் வருத்தப்படவேண்டிய விஷயம். இந்த நிலைமையின் விளைவாக நமது ஸநாதன தர்மமே மறைய நேருமோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது.

ப்ராசீந முறைப்படி கல்வி பயின்று ஜ்ஞாநாநுஷ்டாநசீலர்களாயிருந்துவந்த பல மஹான்களின் வம்சஸ்தர்கள் வ்ருத்திகர்சிதர்களாய் நமது வித்யையை மறந்து வருகின்றனர். அவர்களின் முன்னோர்கள் அரும்பாடுபட்டுச் சேமித்து வைத்த பல சிறந்த ஸ்ரீகோசங்களின் பெருமையை அறியாமல் அவைகள் அழிந்து போகும்படி விட்டுவருகின்றனர். பல திருமாளிகைகளில் பழைய தாளபத்ரஸ்ரீகோசங்களும் அச்சுப்பிரதிகளும் பார்ப்பவர்களில்லாமல் கரையானுக்கு இரையாகிவருகின்றன. சில திருமாளிகைகளிலுள்ள புஸ்தகங்கள் பழைய பேபர்கடைகளில் நிறுக்கப்பட்டு விலைக்குப் போடப்படுகின்றன. அப்படிப்பட்ட தாளபத்ரஸ்ரீகோசங்களிலும் கையெழுத்துப் பிரதிகளிலும் பல நூல்கள் இதுவரையில் அச்சில்வராத அரிய நூல்களாயிருக்கலாம். அச்சுப் புஸ்தகங்களிலும் பலவற்றில் அவற்றை ஓதிய பண்டிதர்கள் சுத்தமான பாடங்களையும் சிறந்த குறிப்புகளையும் எழுதி வைத்திருக்கக்கூடும். இப்படி மிகுந்த சிரமத்துடன் சேமிக்கப்பட்டுவந்த அறிவுக்களஞ்சியங்களையெல்லாம் நாம் இழந்து வருவதுஉசிதமாகுமோ? பிற்காலத்தில் நமது ஸித்தாந்தம் ஸம்ப்ரதாயம் இவற்றைப்பற்றி அறிய ஆவல் கொண்டவர்கள் எவரேனும் இருக்கமாட்டார்களா? அவர்கள் நமது ஸநாதநதர்மத்தின் சிறப்பை அறிந்து அநுபவிக்க நமது ப்ராசீந க்ரந்தங்களை ஸம்ரக்ஷித்து அவர்களுக்குக் கொடுக்கவேண்டியது இப்போதிருக்கும் ஆஸ்திகர்களின் முக்யகடமைகளில் ஒன்றென நாம் எண்ணுகிறோம். ஆகவே நமது ஸநாதநதர்மத்தில் ஹார்தமான அன்பு பூண்ட ஆஸ்திகர்கள் நாம் மேற்கூறியபடி ப்ராசீந க்ரந்தங்களை சித

றுண்டு போகவிடாமல் அவற்றையெல்லாம் சேகரித்து இதற்கென ஓரிடம் ஏற்படுத்தி அங்கு அவைகளை வைத்து அவற்றில் சிறந்த க்ரந்தங்களைப் பொறுக்கி எடுத்து ஸம்ரக்ஷித்துவர ஏற்பாடு செய்யவேண்டும். அந்தந்த ஊரிலுள்ள ஆஸ்திகர்கள் அங்கங்குள்ள நூல்களைத் திரட்டி க்ருபை செய்து நமக்கு அறிவித்தால் இதுவிஷயத்தில் நம்மாலானவற்றைச் செய்ய நாம் ஆயத்தராயிருக்கிறோமென்பதை விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறோம்.

(செய்திகள் தொடர்ச்சி)

ஸ்ரீவேத ஸபா, எழும்பூர்.

சென்ற பிப்ரவரி மீ 17உ சென்னையில் எழும்பூரில் 'ஸாகேதநிலயத்தில்' ஸ்ரீமான் V.V. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்ஸ்வாமியால் கோஷ்டிஸபை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அன்று சென்னை ஹைகோர்ட்டு நீதிபதி கனம் A. S. P. ஐயர் அவர்கள் வேதத்தின் பெருமையைப்பற்றி அரியதொரு உபந்யாஸம் செய்தார். இந்த ஸபை ஸ்ரீமான் M.R. விச்வநாதசாஸ்த்ரியால் நடத்தப்பட்டுவருகிறது. ஸந்த்யாவந்தனம், புருஷஸூக்தம், ருத்ரம், விஷ்ணுஸஹஸ்ரநாமம், ஸூர்யநமஸ்காரம் இவைகள் சிறுவர்களுக்கு காலைநேரத்தில் கற்பிக்கப்பட்டு வருகின்றன. மாதத்தில் ஒரு மாணவனுக்கு ரூ 1. சட்டணம் வாங்கப்படுகிறது. ஆஸ்திகர்கள் தங்கள் சிறுவர்களை கோஷ்டிஸபைக்கு அனுப்பி நல்ல விஷயங்களைக் கற்றுக்கொள்ளச்செய்யும்படி பிரார்த்திக்கப்படுகிறார்கள்.

ஸபைக்கார்யதர்சி.

ஒரு திருத்தம்

சென்ற மாஸத்திய ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவில் வந்திருந்த நக்ஷத்ர மாலிகை என்கிற ஸ்தோத்ரத்தில் 16—வது ச்லோகத்தின் மூன்றாவது பாதத்தை

'ஸாவாவநீம் வஹாவநீம் தக்ஷம்லிவக்ஷவாஸிதாம்'

என்று திருத்தி வாசிக்கவும்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா சந்தா வரவு: 1951— மார்ச் ௴

சந்தா எண்		பெயரும் விலாஸமும்	௵	தொகை ரூ அ
14	ஸ்ரீ	N. S சாரி, பம்பாய்.	51	3—0
15	,,	A. G நரஸிம்ஹ ஐயங்கார், பம்பாய்.	50 & 51	6—0
34	,,	A. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், ஸ்ரீரங்கம்.	51	3—0
79	,,	D. P. செல்லம் ஐயங்கார், சேலம்.	,,	3—0
132	,,	D. ராமானுஜ ஐயங்கார், கொடைக்கநல்லூர்.	,,	3—0
134	.	A. V. கோபாலாசாரியர், திருச்சி.	,,	3—0
167	,,	P. A. ஸ்ரீநிவாஸாசாரியர், பெங்களூர்.	,,	3—0
192	,,	S. நரஸிம்ஹன், கல்கத்தா.	,,	3—0
230	,,	K. பார்த்தஸாரதி, பம்பாய்.	,,	3—0
433	,.	சடகோபதாதாசாரியர், குஜராத்.	51 & 52pt	3—8
483	,,	V. ராமஸ்வாமி ஐயங்கார், புகலூர்.	51	3—0
486	,,	N. V. சாரி, பம்பாய்.	,,	3—0
543	,,	K. சாரங்கபாணி ஐயங்கார், திருவெண்ணெய்நல்லூர்.	51	3—0
560	,,	R. S. ஐயங்கார், கல்கத்தா.	51 & 52	6—0
583	,,	C. S. சக்ரவர்த்தி ஐயங்கார், தி. நகர்,	50 - 52	9—0
644	ஸ்ரீமதி	சக்ரவர்த்தி ராஜம்மாள், அவளூர்.	,,	1—8
656	ஸ்ரீ	K. ஆராவமுதன், கல்கத்தா.	50	3—0
676	,,	K. S, க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், பவானிஸாகர்.	51	3—0
702	,,	K. S. ராகவாசாரி, G. T. மதராஸ்.	,,	3—0
727	,,	T. N. தாதாசாரி, பெங்களூர்.	,,	3—0
854	,,	T. S. சாரங்கபாணி, தென்மருதூர்.	,,	3—0
881	,,	G. சாரங்கபாணி, பம்பாய்.	,,	3—0
997	,,	K. திருநாராயண ஐயங்கார், நீடாமங்கலம்.	,,	3—0
1029	,,	K. சுந்தரம் ஐயங்கார், மன்னார்குடி.	,,	3—0
1078	,,	T. N. விஜயராகவாசாரியர், G. T. மதராஸ்.	51 & 52pt	3—0
1079	,,	N. G. K. சாரி, நீர்வளூர்.	51	3—0
1081	,.	S. ரகுநாதஐயங்கார், கும்பகோணம்.	,,	3—0
1082	,,	S. ரகுநாதன், தி. நகர், மதராஸ்.	,,	3—0
1083	,,	T. ராமஸ்வாமிஐயங்கார், திருப்பூர்.	,,	3—0
1087	,,	S. ராஜகோபாலதாதாசாரியர், காஞ்சீபுரம்.	,,	3—0
1090	,,	C. நரஸிம்மஐயங்கார், கருந்தட்டான்குடி.	51 & 52pt	3—0
1091	,.	K. V. ரங்கஸ்வாமிஐயங்கார், தி. நகர், மதராஸ்.	,,	3—0
1092	,,	P. V. ராஜகோபாலாசாரியர், காஞ்சீபுரம்.	,,	3—0
1093	ஸ்ரீமதி	M. R. அம்மணி அம்மாள், திருவல்லிக்கேணி, மதராஸ்.	51	3—0
1094	ஸ்ரீ	M. க்ருஷ்ணமாசாரியர், மதராஸ்.	51	3—0

மொத்தம் ரூ. 116—0

Regd-No.M.4437.

SRI KRSHNA

(A Spiritual & Cultural Monthly)

Devoted to religious and philosophical matters
and
matters of gripping cultural grandeur catering to cosmopolitan tastes

If You look for Chaste Method, Mould, Motive and Substance in Your Reading,
SUBSCRIBE to SRI KRSHNA

	Annual
ordinary rates:	Rs 5
Special, for those whocompete for the various prize essays and puzzles	,,15

A. S. Raghavan,
Madras Editor.

To Influence the Influential in Asia and Abroad,
ADVERTISE IN SRI KRSHNA

	Annual
Full page	Rs 600
Half page	,, 375

For special positions and double colour please ask for rates:

S.Narayanan, Bombay-19.
Bombay Editor.

Book yeur orders with:—— The Business Manager,
'SRI KRSHNA', East III, Street, Pudukottai, S. India.

Have You Read?

THE AGRICULTURAL ECONOMIST

THE ONLY INDEPENDENT JOURNAL IN THE WHOLE OF ASIA DEVOTED TO RURAL ECONOMICS AND WELFARE.

AGRICULTURE IS THE MAINSTAY OF ASIAN AND INDIAN ECONOMIC LIFE. THIS JOURNAL CONTAINS OBJECTIVE AND DISPASSIONATE STUDY AND SURVEY OF ALL VITAL CURRENT ECONOMIC PROBLEMS.

APPLY FOR PARTICULARS TO
THE MANAGER,
AGRICULTURAL ECONOMIST,
CHEMBUR P. O. BOMBAY.

Printed by Sri J. Rangachariar, Srikaryam, Sri AhobilaMutt. at Sri Malola press, 30, Panagal Street, Tiruvellore
Edited & Published by P. S. Srinivasa Desikachariar, No. 2, Adiappa mudali street, Purasawalkam, vepery, Madras, 7.